Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-27 10-05-2005 செவ்வாய்க்கிழமை ஓசை-81



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்

T.P: 024-222 4247 (சி-11901)

## மட்டு-சந்திவெளியில் இராணுவத்தின் மிலேச்சத்தனம்

# மக்கள் மீது தடியடி, துப்பாக்கிச்சூடு;

# வயோதிபர் ஒருவர் பலி;பலர் படுகாயம்!

## கண்காணிப்புக்குழு முன் நடந்த வெறியாட்டம்

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி சந்திவெளியில் புதிதாக அமைக்கப்பட்ட சிறிலங்கா இராணுவ சோதனைச் சாவடியை அகற்றக்கோரி அப்பகுதி மக்கள் மேற்கொண்ட மறியல் போராட்டத்தின்போது சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வயோதிபர் ஒருவர் ஸ்தலத்திலேயே தலைசிதறிப் பலியானார். கண்காணிப்புக் குழு முன்னிலையில் நடந்த இச்சம்பவத்தின்போது பலத்த தடியடிப்பிரயோகம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் ஏழு பெண்கள் (நான்கு மாணவிகள்) மற்றும் பத்திரிகையாளர் (எம்.ஜி.ஏ.நாசார்) உட்பட 16 பேர் காயமடைந்து வாழைச்சேனை மற்றும் மட்டக்களப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் எட்டுப்பேர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கும், மேலும் எட்டுப் பேர் தடியடிப் பிரயோகத்திற்கும் உள்ளாகியுள்ளனர். இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அந்த இடத்திற்கு வந்து நிலமையை அவதானித்துக் கொண்டிருந்த சமயம் இராணுவத்தினரின் இந்த வெறியாட்டம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றுள்ளது. சோதனைச் சாவடியை அகற்றக்கோரி

(12 ஆம் பக்கம் பார்க்க)



இராணுவக் காவலரணை அகற்றக்கோரி மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்

## புலிகள் பலத்த கண்டனம்

## தற்போதைய சூழ்நிலை நெருக்கடிக்குள் உள்ளாகும் எனவும் எச்சரிக்கை!

மக்களின் அமைதிவழிப் போராட்டத்தின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு இதுபோன்ற சம்பவங்கள்மக்களிடையே போர்நிறுத்தச் சூழல் குறித்த நம்பிக்கையைத் தளர்த்தி உணர்வு ரீதியான கொந்தளிப்புக்கும் வழிவகுக்கும் என்பதோடு நிலைமைகள் மேலும் நெருக்குதலுக்கு உள்ளாகலாம் எனவும் அஞ்சுகிறோம்.

இவ்வாறு தமிழீழ அரசியல்துறை சந்திவெளித் தாக்குதல் பற்றி விடுத்துள்ள பத்திகைச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதான வீதியில் அமைந் துள்ள சந்திவெளிப் பாடசாலைக்கு அருகில் மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குலைக்கும் வகையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி,முல்லை மாவட்டங்களில் கண்டனப்போராட்டங்களுக்கு ஏற்பாடு

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கண்டனப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, தண்ணீரூற்று, மல்லாவி ஆகிய இடங்களில் இன்று காலை 8.30 மணிக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தவுள்ளனர்.இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் ஆசிரியர்கள் இணைந்து எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தவுள்ளனர்.கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பமாகும் இவ் எதிர்ப்புப் போராட்டப் பேரணி அங்கிருந்து கிளிநொச்சி போர் நிறுத்தக் கண்காணிப்புககுழுச் செயலகத்தையும், அரச அதிபர் செயலகத்தையும் சென்றடைந்து அங்கு மகஜர்களையும் கையளிக்கவுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் துப்பாக்கிச் சூட்டைக்கண்டித்து கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால்

கிழக்கில் இன்றைய தினம் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு சந்திவெளிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்தே இந்தக் ஹர்த்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இறந்தவருக்கு அஞ்சலிசெலுத்தும் முகமாக துக்கம் அனுஷ்டிக்குமாறும் வர்த்தக நிலையங்கள்,பாடசாலைகள், காரியாலயங்களை மூடுமாறும், போக்குவரத்தை ஸ்தம்பிதமடையச்செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

## ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச ஊடகவியலாளர் பலருக்கு கொலைப்பயமுறுத்தல்

(கொழும்பு)

பல ஊடகவியலாளர்களுக்கு உயிராபத்து ஏற்படும் வகையில் ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச எச்சரிக்கை விடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திர ஊடகவியலாளர் புத்திக வீரசிங்க ஹிரு பத்திரிகையின் றோகித பாசன அபேயவர்த்தன, சண்டேலீடர் பத்திரிகையின் லசந்த விக்கிரமதுங்க, சண்டேலீடர் பத்திரிகையின் அமெந்த பெரேரா, சுதந்திர ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய, ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர்ஐவன் சுதந்திர ஊடகவியலாளர் குசல் பெரேரா, சுவர்ணவாகினியின், பதுலபத்ம குமார ஆகியோர் தேசிய இனப்பபிரச்சினையானது இணக்கப் பேச்சின் மூலமே தீர்க்கப்பட வேண்டும் எனத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவசேவை

### -வேரவிலில் முதலாவது பணி

லெப். கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவசேவை விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டு அதன் முதலாவது சேவை இன்றும் நாளையும் வேரவில் பிரதேசத்தில் நடைபெறுகின்றது. இச்சேவையில் மருத்துவப் பிரிவின் மருத்துவர்களும், பல் மருத்துவர்களும் மருத்துவப் போராளிகளும் கலந்துகொண்டு மருத்துவசேவையை வழங்குகின்றனர். இம்மருத்துவ நடமாடும் சேவையின் ஊடாக-பொதுமருத்துவம், பல் மருத்துவம், சத்திரசிகிச்சை கிளினிக்,சிறப்பு மருத்துவ ஆய்வு கூட சேவை,பெண் நோயியலும் மகப்பேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

கடந்த நாலாம் திகதி கரப்பொளப் பகுதியில் இராணுவத்தினரும் தேசவிரோதக்குழுவினரும் இணைந்து நடத்தியதாக்குதலில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

கப்டன்-சுபன்

(அரசரத்தினம்-விக்கினேஸ்வரன், 72-V வளத்தாப்பிட்டி மல்வத்தை அம்பாறை)

லெப். நிலவரசன்

(இராசலிங்கம்-சங்கர், ஆர்.டி. எஸ் வீதி களுவங்கேணி-1, செங்கலடி,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புலிகள்-படையினர் நேற்றுச் சந்தித்துப் பேச்சு

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நிகழ்ந்துள்ளது.போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெற்றது. இதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் மற்றும் நகரப்பொறுப்பாளர் சிவகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

இராணுவத் தரப்பில் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பாலசூரிய உட்பட்டவர்கள் பங்கேற்றனர். இதன்போது கட்டைப்பறிச்சான் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பாக எழிலன் குற்றம் சுமத்தியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



அன்புள்ள நீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்ற ஆற்றத் தொண்டு செய்யப்பல அன்பர்தோன்றத் தோன்ற தோற்றுசுவைச் சோறாக உண்ண உண்ணக் கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப கடி அமுதசுரபியினாள் ஊட்ட ஊட்டக் கொண்டு பசி தீர்க்கர்கள் கோடி கோடி கோடானு காலமெல்லாம் வாழிவாழி.

# நயினாதீவு-ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

## 2005 ஆரம்பம்-1960 (வரைவுள்ளது) 2005

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீநாகபூஷணிஅம்பாளின் திருவருளினால் 1960 ஆம்ஆண்டு ஆரம்பிக்கப்பெற்று நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை "அமுதசுரபி" என்றும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 45 ஆவது ஆண்டில் பிரவேசிக் கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெரு மக்கள்,விவசாயப்பெருமக்கள்,தொழிலாளப்பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள் அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள் உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும்,நற்சேவைத் தொண்டர் களுக்கும்,அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும், அன்னதானத் தொண்டினை நேரடி யாகக் கண்டும்,கேட்டும் ஆசியுரை வழங்கியஅன்பர்களுக்கும், எல்லா வற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம்,பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்து பணிவார்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாண்டு வைகாசி மாதம் 25 ஆம் நாள் (08.06.2005) புதன் கிழமை அம்பாளின் மகோற்சவம் கொடியேற்றத் திரு விழாவுடன்ஆரம்பமாகி 17.06.2005 வெள்ளிக்கிழமை மஞ்சத்திருவிழாவும், 20.06.2005 திங்கட்கிழமை சப்பறத்திருவிழாவும், 21.06.2005 செவ்வாய்க்கிழமைதேர்த்திருவிழாவும், 22.06.2005 புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 23.06.2005 வியாழக்கிழமை பூங்காவனமும் நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் 16 நாட்களும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது.ஆகவே தருமசீலர்களாகிய உங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பெற்ற தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் வழமை போல் நீங்கள் உதவும் பணம். பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**நேரடியாகப் பணம் கொடுக்க விரும்புவோர்.**

***Amuthsuravhi Commercial A/C No -1247985001,***
***Peoples Park*** கட்டிடம் ***Pettah*** எனும் விலாசத்திற்கு
அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்**
**ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி**
**அன்னதானசபை,**
**நயினாதீவு–2**

(சி.11952)

# வரி விளம்பரம்

## 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B),

(சி.11779)

## உயிரியல் கருத்தரங்கு

காலம்:-2005.05.12 வியாழக் கிழமை காலை (8.30) இடம்:-கேம் பிறிச்கல்லூரி (கிளிநொச்சி) ஆசிரியர்:- NESAN. (6112)

## தவறவிடப்பட்டுள்ளது

மு.இராஜ்குமார் பொது சுகாதார பரிசோதகர் புதுக்குடியிருப்பு ஆகிய நான் எனது பயணப்பொதியினை 08.05.2005 ஒட்டுசுட்டானிற்கும் கற்சிலைமடுவிற்கும் இடையில் தவற விட்டுவிட்டேன். இதில் எனது உடு புடவைகளும், ஆவணங்களும் உள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(6151)

# லண்டன் மருத்துவரின் சேவைக்கு கிளிநொச்சியில் பாராட்டு வைபவம்

(அலுவலக செய்தியாளர்)

லண்டனில் இருந்து வருகை தந்து கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மேற்கொண்ட சத்திரசிகிச்சை நிபுணர் பிலிப். அவர்களின் சேவையைப் பாராட்டி பிரியாவிடை நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

இந்தப் பிரியாவிடை நிகழ்வானது இன்று மாலை4.30 மணியளவில் மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் நடைபெறவுள்ளது.

லண்டனில் இருந்து வருகைதந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையிலும், வேறும் சில வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சையினை நீண்ட நாட்களாக மேற்கொண்ட சத்திரசிகிச்சை நிபுணர் பிலிப் அவர்களைப் பாராட்டி பிரியாவிடை நிகழ்வினை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (கு)

# வட்டக்கச்சி வைத்தியசாலையில் 2ஆவது வெள்ளிக்கிழமைகளில் கிளினிக்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சியைச் சேர்ந்த கிளினிக் நோயாளர்களின் நன்மைகருதி வட்டக்கச்சி அரசினர் வைத்தியசாலையில் மாதாந்தம் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் ஒரு மணிக்கு மருத்துவக் கிளினிக் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கிளினிக் ஆரம்பமாகி நடைபெறும். வட்டக்கச்சியைச் சேர்ந்த கிளினிக் நோயாளர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்வதற்குப் பதிலாக இங்கு நடைபெறும்கிளினிக்கிற்குச் சென்ற[illegible]கிச்சையைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதி மாகாண சுகாதார சேவைகள் ட[illegible]ப்பாளர் கேட்டுள்ளார்.

# 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 ‌ 11 ‌ 1925



உதிர்வு 02 ‌ 05 ‌ 2003

அமரர் உயர் வைத்திய கலாநிதி
திரு.சு.சிறிராஜசேகரம்

அன்பின் உறைவிடமாய், எம் எல்லோருக்கும்
வழிகாட்டியாய்,நோய் தீர்த்த எமது குலவிளக்கே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து விண்ணுலகம்
ஏகி இன்றுடன்இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்திடினும்.
அழியாத புன்னகையுடன் அன்பாக
நோயாளிகளைப் பார்த்து நோய் தீர்க்கும்
தங்கள் பூ முகம் தான் மறைந்திடுமா
எம் அனைவர் உள்ளங்களிலும்அணையாத
தீபமாய் தள்ளாத வயதிலும் அயராது
செஞ்சிலுவைச் சங்க சேவையே தனது சேவையென
விளங்கிய நீங்கள் விண்ணக வாழ்விலும் ஒளியாகப்
பிரகாசிக்க வேண்டும் என்று இறைவனைப்
'பிரார்த்திக்கின்றோம்.

**இப்படிக்கு**
**மனைவி,பிள்ளைகள்,பேரர்கள்**
**மைத்துனர், மருமக்கள்.**


(6115)


# ஐரோப்பாவை விடுவிக்க உயிர்த்தியாகம் செய்த அமெரிக்க வீரர்கள் கல்லறைக்கு புஷ் அஞ்சலி

ஐரோப்பாவை ஹிட்லரின் படைகளிடமிருந்து விடுவிக்க உயிர்த்தியாகம் செய்த அமெரிக்க இராணுவ வீரர்கள் கல்லறையில் அதிபர் ஜோர்ஜ் புஷ் அஞ்சலி செலுத்தினார்.

இராண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் நாஜி படையினரை தோற்கடிக்க அமெரிக்காவுடன் நெதர்லாந்தும் இணைந்து போரிட்டது. அப்போரில் உயிர் நீத்த எண்ணாயிரம் அமெரிக்க இராணுவ வீரர்களின் கல்லறை நெதர்லாந்தில் மார்க்ரட்டன் என்ற இடத்தில் உள்ளது. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நேற்று முன்தினம் அங்கு சென்றார். நெதர்லாந்து அரசி பேட்ரிக்ஷ், பிரதமர் ஜோன் பீட்டர் பல்கினெண்டி ஆகியோர் அவரை வரவேற்றனர். அமெரிக்கப் போர் வீரர்களின் கல்லறை தோட்டம் வாயிலில் உள்ள நினைவுத் தூணில் அவர்கள் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சியில் அதிபர் ஜோர்ஜ் புஷ் பேசுகையில், 'ஏராளமான தியாகம் செய்த ஒரு தலைமுறைக்கு அஞ்சலி செலுத்துகிறேன். நமது தலைமுறை இதனால் சுதந்திரமாக வாழ்கிறது. 60 ஆண்டுக்கு முன் நடந்த உலகப் போரால் ஐரோப்பாவில் சனநாயகம் மலர்ந்தது. அதுதான் இரண்டாம் உலகப்போர் நமக்கு வழங்கும் செய்தி. அடுத்த 60 ஆண்டுக்கும் இது தான் பாடம் என்றார்.





இராண்டாம் உலக யுத்தத்தின் போது ஜேர்மனிய நாசிப்படைகளை வெற்றிகண்ட [illegible]0 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் நோக்கிலும், போரில் சாவடைந்த தமது படைகளையும், பல லட்சக்கணக்கான பொது மக்களையும் நினைவு கூரும் முகமாக மொஸ்கோவுக்கு விஜயம் செய்துள்ள இத்தாலியப் பிரதமருடன் ரஷ்ய சனாதிபதித் தம்பதிகளும், அமெரிக்க சனாதிபதித் தம்பதிகளையும் காணலாம்

# ரஷ்யா மன்னிப்புக்கேட்க வேண்டும் பால்டிக் நாடுகள் வற்புறுத்தல்

(மொஸ்கோ)

**"எங்கள் நாடுகளை ஆக்கிரமிப்புச் செய்வதற்காக ரஷ்யா மன்னிப்புக் கேட்கவேண்டும்" என்று. பால்டிக் நாடுகள் ரஷ்யாவை வற்புறுத்தியுள்ளன.**

ரஷ்யா கம்யூனிஸ் நாடாக இருந்தபோது, பால்டிக் குடியரசுகள் என அழைக்கப்படும் எஸ்தோனியா, லிதுவேனியா, லட்வியா ஆகிய நாடுகளை ரஷ்யா தன்னுடன் இணைத்துக்கொண்டது.

கம்யூனிஸ்ட் ஆட்சி கவிழ்ந்து, ரஷ்யா உடைந்து சிதறியபோது பால்டிக் குடியரசுகளும் மூன்று தனிநாடுகளாகச் சுதந்திரம் அடைந்தன.

இரண்டாம் உலகப் போர் முடிவடைவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது ரஷ்யாவில் ஜேர்மன் படைகளுக்கு ஏற்பட்ட தோல்விதான். ரஷ்யா வெற்றி பெற்றதைத் தொடர்ந்து உலகப்போர் முடிவுக்கு வந்தது. இந்த வெற்றியின் 60ஆம் ஆண்டு விழா ரஷ்யாவில் நேற்றுத் தொடக்கம் நடக்கிறது. இந்த விழாவில் 50 நாடுகளின் தலைவர்கள் பங்கு கொள்கிறார்கள்.

இந்தவிழாவில் கலந்துகொள்ளும்ப[illegible] ரஷ்ய சனாதிபதி புட்டின் விடு[illegible] அழைப்பை எஸ்தோனியா அதிபர் அர்னால்டு ரூட்டேல், லிதுவேனியா அதிபர் வால்தாஸ் ஆதம்காஸ் ஆகியோர் புறக்கணித்து விட்டனர்.

இரண்டாவது உலகப் போர் முடிவுக்கு வந்த பிறகு, பால்டிக் நாடுகளை ரஷ்யா இணைத்துக் கொண்டது. இதற்கும், ஜேர்மனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதற்கும் ரஷ்யா மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று இந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

பால்டிக் நாடுகளை ஆக்கிரமித்தது சட்டத்துக்குப் புறம்பானது என்றும், ரஷ்யா இதனை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் இந்த நாடுகள் கோருகின்றன.

இரண்டாம் உலகப் போர் முடிந்ததும், ஜேர்மனி-ரஷ்யா இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. மோலோ டோப்ரிப்பன் ட்ராப் ஒப்பந்தம் எனப்படும். இதில் ரஷ்யா கையெழுத் திட்டதற்காகவும் அந்த நாடு மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும் பால்டிக் நாடுகள் கோருகின்றன.

பால்டிக் நாடுகளின் இந்தக் கோரிக்கையை ரஷ்யா ஏற்க மறுத்துவிட்டது. இது பற்றி ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி இவானோவ் கூறுகையில்.

ரஷ்யா யாரிடமும் மன்னிப்புக் கேட்காது. இந்த உடன்பாட்டைச் செய்துகொண்டதற்காக வருத்தம் தெரிவிக்கக் கோரும் நாடுகள், திறந்து கிடக்கும் கதவைத்தட்டிக் கொண்டு இருக்கின்றன. 1989 ஆம் ஆண்டே ரஷ்யா அமைச்சரவை கூடி ஒரு மனதாக இந்த உடன்பாட்டுக்குக் கண்டனம் தெரிவித்தது. அதைத் திரும்பச் செய்ய வேண்டிய அவசியம எங்களுக்கில்லை. நாங்கள் யாரிடமும் மன்னிப்புக்கேட்க மாட்டோம். சரித்திரத்தை சரித்திர ஆசிரியர்களிடம் விட்டுவிடுவோம். அதை அரசியலாக்க வேண்டாம்.

இந்தப் பிரச்சினையை உள்நாட்டு அரசியல்காரணங்களுக்காக அந்த நாடுகள் எழுப்பியுள்ளன.

பால்டிக் நாடுகளை ரஷ்யா ஆக்கிரமித்தது என்று சொல்வது முட்டாள்தனமானது. உனக்குச் சொந்தமானதை நீ ஆக்கிரமித்துக் கொள்ள முடியாது.இவ்வாறு ரஷ்யா அமைச்சர் செர்ஜி இவானோவ் கூறினார்.



# ஐ.நா சபையால் தேடப்படுவோர் பட்டியலில் அல்ஹைதாவுடன் தொடர்புடைய தாவூத்

தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் என ஐ.நா சபையால் தேடப்படுவோர் பட்டியலில மும்பை சமூகவிரோத குண்டர் கும்பல் தலைவன் தாவூத் இப்ராகிமின் பெயர் இடம்பெற்றுள்ளது.

1993 இல் மும்பையில் நடந்த தொடர் குண்டு வெடிப்புக்கு முக்கிய காரணமாக தாவூத் இப்ராகிம் கருதப்படுகிறார்.

ஐ.நா சபை இப்போது புதிதாக வெளியிட்டுள்ள தேடப்படுவோர் பட்டியலில் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது. [illegible] தேடப் படுவோரின் [illegible] முடக் கவும், நாட்டுக்குள் [illegible]வைத் தடுப்பதற்கும் ஐ.நா தீமா[illegible] 1267 வலியுறுத்துகிறது.



இரண்டாம் உலகப் போரின்போது பலியான படையினரின் நினைவாக மொஸ்கோவில் நினைவுச் சின்னமொன்றை திறந்து வைத்தபின் மொஸ்கோவின் மேயரும் சனாதிபதி விளாடிமிர் புட்டினும் பாதுகாப் பமைச்சர் செர்ஜிஇவானேவ்வும் உரையாடுகின்றனர்.

# ஈராக்கின் போக்குவரத்து அமைச்சர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை

(பாக்தாத்)

ஈராக் போக்குவரத்து அமைச்சரக அதிகாரி சோபாயாசின் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அமெரிக்க இராணுவத்தை எதிர்த்துப் போராடும் தீவிரவாதிகள் இதுவரை பத்திற்கும் மேற்பட்ட அரச அதிகாரிகளைச் சுட்டுக்கொன்றுவிட்டனர்.

# ஆத்திரம் கொண்டமக்கள் தாக்குதல் 60 தொழிற்சாலை ஊழியர்கள் காயம்

(டாக்கா)

பங்களாதேசில் விஷ வாயுவை கசியவிட்ட தொழிற்சாலை மீது பொதுமக்கள் தாக்கியதில் 60 பேர் காயமடைந்துள்ளனர்.


விஷவாயுவைச் சுவாசித்த 25 பேர் உடல்நலம் பாதிக்கப்பட்டமையால் ஆத்திரம் அடைந்த அந்தப்பகுதி மக்களே இத்தாக்குதலை நடத்தினர்.

இதனால் தொழிற்சாலையில் வேலைபார்த்த இரண்டு சீனர்கள் உட்பட 60 பேர் காயமடைந்தனர். பொலிசார் விரைந்து சென்று தாக்குதல் நடத்தியவர்களை விரட்டி அடித்தனர். தொழிற் சாலையும் மூடப்பட்டது.

# பள்ளத்தில் பாய்ந்தது பேருந்து பெருவில் 37 பேர் உயிரிழப்பு

பெருநாட்டில் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று பள்ளத்தில் பாய்ந்ததில் 37 பேர் உடல் நசுங்கிப் பலியாகினர் 17 பேர் படுகாயமடைந்தனர்.

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்தே விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.காலநிலை சீரின்மையே விபத்துக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



லயன்ஸ் கேட் என்ற இஸ்ரேலின் பழைய நகரமருகில் இஸ்ரேலிய ரோந்துப் படையினருக்கும், முஸ்லிம் தீவிரவாதிகளுக்குமிடையில் சண்டை ஏற்பட்டபோது குதிரையில் செல்லும் இஸ்ரேலியப் பொலிசார் அராபியர் ஒருவரை அப்பால் போகுமாறு துரத்துகிறார்கள்.

# ஹங்கேரி விமானம் இரண்டு கட்டாயமாகத் தரையிறக்கம்

ஹங்கேரியில் விமானப்படையின் இரண்டு விமானங்கள் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே வலுக்கட்டாயமாகத் தரையிறக்கப்பட்டன.


விமானம் கடத்தப்பட்டதற்கான அவசரகால சமிக்ஞை கொடுக்கப்பட்டதால் , அதிகாரிகள் விமானத்தைக் கீழே இறக்க உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமானம் தரை இறங்கிய பின்னர்தான் அது கடத்தப்படவில்லை என்பது தெரியவந்தது. சமிக்ஞை முறையில் ஏற்பட்ட கோளாறால் தவறான சமிக்ஞை கொடுக்கப்பட்டது என்பது பின்னர் தெரியவந்தது.

# விடுதலையடையும் காலம் வெகுதொலைவிலில்லை

# அதற்கேற்ப இளைய சமூகத்தை தயார்ப்படுத்த வேண்டும்

## -கருத்தாடல் நிகழ்வில் க.வே.பாலகுமாரன்



**"நாம் விடுதலை அடையும் காலம் வெகு தொலைவி லில்லை. எனவே விடுதலை அடையும் காலத்தோடு ஒத்திசைவாக நகரும் வகையில் இளைய சமூகத்தவர்களை நாம் தயார்ப்படுத்த வேண்டும்" என தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் அவர்கள் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் எழுகலை இலக்கிய பேரவை நடத்திய கருத்தாடல் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைகளை பகிர்ந்து கொண்டபோதே இதனைத் தெரிவித்தார்.

எமது இளைய சமூகத்தினரின் தேடல் இன்று குறைவடைந்து வருகிறது. எனவே இந்த சமூகத்தினை ஒரு புத்துயிர் பெறும் சமூகமாகக் கொண்டுவர வேண்டும் என்று குறிப்பிட்ட பாலகுமாரன் அவர்கள், இதற்கு இந்தப் பேரவை கடும் முயற்சியினை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக எமது சமூகம் இன்று தகவல் பரிமாற்றத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. இதற்கும் இளைய சமூகத்தினரை வளப்படுத்த அனைவரும் உழைக்க வேண்டுமெனவும் க.வே. பாலகுமாரன் குறிப்பிட்டார். கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தாடல் நிகழ்வு காலை 10.00 மணியளவில் எழுகலை இலக்கியப் பேரவைத் தலைவர் பு.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து இலக்கியப் பேரவையில் அங்கம் வகித்த குழுவினர் கட்டற்றமுறையில் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். அதனூடாக குறித்த கருப்பொருளில் அனைவருக்கும் பரந்துபட்ட அறிவும் ஊட்டமும் ஏற்பட வாய்ப்பாக அமைந்தது.

நிறைவில் பொருத்தமான ஒருவரால் அமர்வில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை தொகுத்தளித்தவுடன், கருத்தாடல் நிகழ்வு நிறைவடைந்தது. இந்த கருத்தாடல் நிகழ்வு மாதாந்தம் நடைபெறவிருப்பதாக பேரவையினர் தெரிவித்துள்ளனர். (கு)

# பள்ளிமுனைப் பகுதியில் துப்பாக்கிகள் மீட்பு

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனையில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த மூன்று எஸ்.எல்.ஆர்.ரக துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை பள்ளிமுனையில் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு அருகாமையிலுள்ள ஒருவரின் வீட்டில் நீர் இணைப்பு பெறுவதற்காக குழாய் பதிக்க வாய்க்கால் வெட்டும் போது மூன்று துப்பாக்கிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது இந்திய இராணு வத்தால் பாவிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. உடனடியாக அந்த வீட்டுக்காரர் மன்னார் பொலிசாருக்குத் தகவல் கொடுத்து அவ் விடத்திற்கு பொலிசார் வந்து துப்பாக்கிகளை மீட்டுள்ளனர். (18)

# மே.தினப் பேரணியில் வெற்றிபெற்ற ஊர்திகள்

மன்னாரில் பேரணியில் கலந்து கொண்ட ஊர்திகளின் இடையே நடாத்தப்பட்ட போட்டியில் மன்னார் மாவட்டத்தின் மீனவ சமாசத்தின் மீன் பிடித் தொழிலைச் சித்திரிக்கும் ஊர்தி முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டதுடன்,

விவசாய உற்பத்தித் தொழிலைச் சித்திரிக்கும் ஊர்தி இரண்டாம் இடத்தையும் தொழிலாளர்கள் பல்வேறு தொழில்களைச் சித்திரிக்கும் மன்னார் மாவட்டம் தமிழர் மேம்பாட்டு கழகத்தின் ஊர்தி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (18)



கெயர் நிறுவனத்தின் லிப்ற் திட்டத்தின் கீழ் செயற்பட்டுவரும் புன்னைநீராவி சேமிப்புக்கடன் குழுவினது ஐந்தாவது ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் புன்னைநீராவிப் பாடசாலையில் திருமதி. பானுமதி தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கெயார் நிறுவன லிப்ற் திட்ட நுண்நிதி உத்தியோகத்தர் திருமதி. ம.சிவாஜினி மற்றும் புதுக்குடியிருப்பு கெயர் நிறுவனத்தைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், விசுவமடு பிரதேசப்பொறுப்பாளர், கரைச்சிவடக்கு நிறுவனத் தலைவர், இணைப்பாளர், கிராமமட்ட அமைப்புக்கள், பாடசாலைஆசிரியர்கள் மற்றும் பூநகரி கண்டாவளைப் பிரதேசத்தில் இயங்கும் இருபதுக்கும் மேற்பட்ட சேமிப்புக்கடன் குழுக்களின் அங்கத்தவர்கள், குழு அங்கத்தவர்கள் யாவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இக் குழுவானது 30 பிளாஸ்றிக்கதிரைகளை தமது கிராமத்தில் இயங்கும் முன்பள்ளிக்கு வழங்க முன்வந்துள்ளது. (கு)

# இரணைமடுவில் சிறுவர் பூங்கா அமைக்கும் முயற்சி இழுபறி நிலையில்!

## – இடம் ஒதுக்கீடு இன்மையால் திட்டம் கைவிடப்படலாம்

திருவையாறு பிரதேசத்தின் இரணைமடுவில் சிறுவர் பூங்கா அமைக்கும் முயற்சி இழுபறி நிலையில் இருந்து வருகின்றது. இதனால் இதை அமைக்க முன்வந்துள்ள அமைப்பு இத்திட்டத்தை வேறொரு பகுதிக்கு மாற்றம் செய்யும் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக தெரிய வருகிறது.

சிறுவர் பூங்காவிற்கென கடந்த பல வருடங்களுக்கு முன்னர் தயார்ப் படுத்தப்பட்டிருந்த இரணைமடுக் குளத்தை அண்டிய பகுதியில் தற்போது சிறுவர் பூங்கா அமைக்க உலக உணவுத் திட்டத்தின் கீழ் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இக்காணி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உரித்தானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் அப்பிரதேச மக்களினால் இக்காணி துப்புரவு செய்யப்பட்டு சிறுவர்களிற்கான பூங்கா மற்றும் வயது வந்தவர்களிற்கான கல்விக்கூடம் ஒன்று என்பன அமைக்கப்பட்டு பல முன்னேற்றப்பாடான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட இருந்தது. சிறுவர்களிற்கான விளையாட்டு உபகரணங்களும் தருவிக்கப்பட்டிருந்தன.

அத்துடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பலதரப்புக்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் இக்காணி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய தென்பதால் பூங்கா அமைக்கும் விடயம் இழுபறி நிலையில் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் பூங்கா அமைக்கும் திட்டமும் கைவிடப்படும் நிலைக்கு சென்றுள்ளது. இப்பூங்காவிற்கு என கொண்டு வரப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் உட்பட பல்வேறு உபகரணங்கள் வேறு இடத்திற்கு எடுத்துச் செல்ல இருப்பது கண்டு அப்பிரதேச பொதுமக்களும், சிறுவர்களும் மிகுந்த கவலை கொண்டுள்ளதோடு, விரைவில் தமக்கு ஒரு பூங்காவை அமைத்துத் தரும[illegible] உரியவர்களிடம் வேண்டுகில[illegible]ர்கள்.

# இ.செஞ்சிலுவைச் சங்கத் [illegible]ொண்டர்கள் வைத்தியசாலையில் சிரமதானம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கரைச்சிப் பிரிவு கிளை ஏற்பாட்டில் நேற்று முன்தினம் ஞாயிறு காலை கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலை வளாகத்தில் சங்கத்தின் கரைச்சிப் பிரிவுக் கிளைத் தலைவரும் கிளிநொச்சி பதிவாளருமான இ.உதயகுமார் தலைமையில் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது.

இச்சிரமதானப் பணியில் செஞ்சிலுவைச் சங்க கரைச்சிப் பிரிவுத் தொண்டர்களும் செஞ்சிலுவைச் சங்க சாந்தபுரம் அலகு கிளைத் தலைவர் எஸ்.அருள்நேசன், கிளிநொச்சிநகர் அலகுக் கிளைத் தலைவர் டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி கரைச்சிப் பிரிவு நிர்வாக உத்தியோகத்தர் செல்வி. எம்.நளாயினி உட்பட பொதுமக்களும் பங்கு கொண்டனர்.

மேலும் செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு சிரமதானப்பணி கருத்தமர்வு முதலானவற்றை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# வவுனியா பெரியமடுக் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரியமடுக் கிராமத்தில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட 25 வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கையளிப்பு நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.நேப் (நோர்சீ)நிறுவனத்தின் நிதியுதவி யுடன் கட்டப்பட்ட மேற்படி வீடுகளை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ச. சண்முகம் வைபவ ரீதியாக மக்களிடம் கையளித்தார்.

இந்த வீடுகள் கையளிப்பு நிகழ்வில் நெடுங்கேணிப்பிரதேச நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கிட்டு, நெடுங்கேணி பிரதேச செயலர் க.பரந்தாமன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அன்றைய தினம் நெடுங்கேணி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றபகுதி நாள் கூட்டத்தின்போது மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களால் கனகராயன்குளம் வடக்கு, பட்டரைப்பிரித்தகுளம் நயினாமடு ஆகிய கிராமங்களின் பொதுநோக்கு மண்டபங்கள் திறப்பதற்கான அத்தாட்சிப் பத்திரங்களை உரியவர்களிடம் கையளித்துள்ளார் என நெடுங்கேணிப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

# மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வட்டக்கண்டலில் பாராட்டு விழா

(மன்னார்)

மன்னார் வட்டக்கண்டல் அ.த.க பாடசாலையில் கடந்த வருடம் க.பொ.த சாதாரணதரத்தில் அதிகூடிய பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் பாடசாலைச் சமூகம் பாராட்டுவிழா நடத்தியுள்ளது.

இப்பாடசாலையில் பரீட்சை எழுதிய மாணவரில் அறுபது வீதமானோர் சித்தியடைந்திருந்ததுடன் மடுக் கல்வி வலயத்திலேயே இப்பாடசாலையில் தான் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் அதிக பெறு பேறு கிடைத்தது. இந்தப் பரிசளிப்பு விழா நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை மன்னார் மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஒளிவளவன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பாராட்டுரைகள் வழங்கப்பட்டு அதிகூடிய பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வுகள் பாடசாலை அதிபர் அந்தோனிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது. (18)

# இரவில் வீதி விதிமுறைகளை மீறுவோர் மீது நடவடிக்கை

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேச காவல்துறை பணிமனையினர் இரவில் வீதி விதிமுறைகளை கடைப்பிடிக்க தவறும் வாகனச் சாரதிகளுக்கு அவ்விடத்தில் வைத்து குற்றப்பணம் அறவிட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரை மல்லாவி நகர்ப் பகுதிகளில் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வெளிச்சம் இன்றிவரும் வாகனச் சாரதிகள் போக்குவரத்துக்கு இடையூறாக வீதிகளில் வாகனத்தை நிறுத்தி வைக்கும் வாகனச் சாரதிகள் உந்துருளிகளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்தல், இலக்கத் தகடுகள் இன்றி பக்க சமிச்ஞைகள் இன்றி வரும் வாகனச் சாரதிகள் மீது அவ்விடத்தில் தடுத்து குற்றப்பணம் அறிவிடப்பட்டது. தொடர்ந்தும் துணுக்காய்ப் பிரதேசத்தில் இந்நடவடிக்கை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (24)

# ஊரக தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு

(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேசத்தின் சிவபுரம் பகுதியில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவுக் கூட்டம் சிவபுரம் அ.த.க பாடசாலையில் நேற்று முன்தினம் பி.பகல் 4.00 மணிக்கு முன்னாள் செயலாளர் கண்ணன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புரையினை பாண்டியன்குளம் பிரதேச பொறுப்பாளர் சி. இலக்கியன் வழங்கினார். தொடர்ந்து தெரிவுகளும் இடம் பெற்றன. செயலாளராக த.முரளி, உப செயலாளராக இ.ஜெயசிங்கம், பொருளாளராக க. செல்வரத்தினம் ஆகியோருடன் 09 உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது.

அத்துடன் பாண்டியன்குளம் பிரதேசத்தின் பொது அமைப்புக்களுக்கான சந்திப்புகளும், சமகால அரசியல் கருத்தூட்டல் நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (24)

# இராணுவ அல்லது பொலிஸ் வாகனத்தில் தான் சிவராமின் சடலம் கொண்டு வரப்பட்டிருக்கலாம்

## -சிறி.முன்னாள் சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஊடகவியலாளர் சிவராம் படுகொலை செய்யப்பட்டு வீசப்பட்டுக் கிடந்த பாராளுமன்ற வளாகத் தொகுதிக்கு இரவு நேரங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடச் செல்ல முடியாதென்பதால் சிவராமின் சடலம் இராணுவ வாகனத்திலோ அல்லது பொலிஸ் வாகனத்திலோ தான் அவ்விடத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்க வேண்டுமென முன்னாள் சபாநாயகரும். ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.**

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக கடந்த வெள்ளிக் கிழமை பாராளுமன்றில் சபை ஒத்திவைப்புவேளை இடம் பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த ஜோசப் மைக்கல் பெரேரா மேலும் கூறியதாவது;

சிவராம் படுகொலை செய்யப்பட்டு பாராளுமன்ற வளாகத்திற்கருகில் போடப்பட்டிருந்தமையானது பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பாக பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் மூலம் நாட்டில் ஊடகவியலாளர்களுக்கு மட்டுமல்ல, பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பும் கேள்விக் குறியாகியுள்ளது.

இந்நாட்டிலுள்ள இனப்பிரச்சினை தீரும்வரை இவ்வாறான கொலைகள் தொடர்ந்தும் இடம்பெறவே செய்யும். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக சனாதிபதி தீவிர முயற்சியெடுத்து வருகின்றார். அவரின் முதல் முயற்சியான பொதுக் கட்டமைப்புக்கு நாம் அனைவரும் ஆதரவு வழங்கவேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலமாகவே கொலைக் கலாசாரத்தை தடுத்து நிறுத்த முடியும்.

சிவராமின் கொலைப் பழியை ஒவ்வொருவரும் ஒவ்வொருவரின் தலைகளிலும் போட முயற்சிக்கின்றனர். இவ்வாறான செயல்கள் நாம் மறைமுகமாக கொலைகாரர்களை காப்பாற்ற எடுக்கும் முயற்சியாகவே அமைந்துவிடும்.

எனவே, ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை தொடர்பாக தீவிர விசாரணைகளை நடத்தி உண்மைத் தன்மைகளை பகிரங்கப்படுத்த வேண்டும் என அவர் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பது ஏன்? வெளிநாட்டுத்தூதுவர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளதாம்

## தேசப்பற்று தேசிய இயக்கம் கூறுகிறது

(கொழும்பு)

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்திக் கொள்வதை எதிர்ப்பது ஏன் என்பது தொடர்பாக இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து விளக்கம் அளிக்க இருப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத் தலைவர் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி நாடு பிளவுபடுவதை தடுப்பது எவ்வாறு என்பது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை இரவு அவசர அவசரமாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் நிறைவேற்றுக் குழு கூடி மேற்கண்ட தீர்மானத்தை மேற்கொண்டதாகவும் இதன்போது வேறும் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவும் எல்லே குணவன்ச தேரர் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்; எந்த விதத்திலும் பொதுக்கட்டமைப்பு ஏற்படுவதை ஆதரிக்கமாட்டோம். தடுத்து நிறுத்துவோம். இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து இதன் பயங்கரமான நிலைமை தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளோம், அதன் முதற் கட்டமாக இந்திய உயர்ஸ்தானிகரை அடுத்த வாரம் சந்திக்கவுள்ளதுடன், அமெரிக்கத் தூதுவர் கனடா மற்றும் ஆசிய நாட்டுத் தூதுவர்களையும் சந்திக்கவுள்ளோம் எனத் தெரிவித்த அவர் -அது மட்டுமன்றி அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து சனாதிபதி மேற்கொள்ளும் தன்னிச்சையான நடவடிக்கையை எதிர்க்குமாறும், பொதுக்கட்டமைப்பை எதிர்த்து நாட்டு மக்களுக்கு பகிரங்கமான அறிவிப்பை விடுக்குமாறும் கோரவுள்ளதாகவும் நாடுபூராகவும் சிங்கள, பௌத்த அமைப்புக்களுடன் இணைந்து பரந்தளவில் எதிர்ப்புக்களை மேற்கொண்டு பொதுக் கட்டமைப்பு என்ற பெயரில் காட்டிக் கொடுப்பை தடுத்து நிறுத்துவோமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பரீட்சை சான்றிதழ்களைப் பெற இணையத்தள மூடாக விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

பரீட்சை சான்றிதழ்களை எதிர் காலத்தில் இணையத் தளமூடாக பெறக்கூடிய புதிய நடைமுறையை இலங்கை பரீட்சைத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கை தபால் திணைக்களமும், கல்வித்திணைக்களமும் இணைந்து அறிமுகப்படுத்தியுள்ள இந்த புதிய நடைமுறைப் பரீட்சைச் சான்றிதழ்களை பெறுவதற்காக திணைக்களத்துக்கு செல்ல வேண்டிய நிலையை தவிர்க்க உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்திடம் சான்றிதழ்களைப்பெற விரும்புபவர்கள் அருகிலுள்ள தபால் திணைக்களத்தின் ஊடாக பணத்தைச் செலுத்தி குறிப்பிட்ட இரகசிய இலக்கமொன்றைப் பெற்று பின்னர் கல்வித்திணைக்கள வெப்தளம் ஊடாக சான்றிதழ்களுக்காக விண்ணப்பிக்க முடியும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. சான்றிதழ்களைப் பெறவிரும்புபவர்கள் குறிப்பிடும் முகவரிக்கு அவை அனுப்பி வைக்கப்படும் என பரீட்சைத்திணைக் களம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ளவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம் தற்போது இந்தச் சேவையை வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் 50 முக்கிய தபாலகங்கள் ஊடாக பெறமுடியும் எனவும் அடுத்த சில வாரங்களில் 125 தபாலகங்களும், வருட இறுதிக்குள் 630 தபாலகங்களுக்கும் இது விஸ்தரிக்கப்படும் எனவும் தபால் மா அதிபர் கே.சேன தீர தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்குப் பரீட்சை சான்றிதழ்களைப் பெறுவதற்கான 150 விண்ணப்பங்கள் தங்களுக்கு கிடைப்பதாகவும் இந்தப் புதிய நடைமுறை தூரப்பகுதிகளிலிருந்து சான்றிதழ்களுக்காக விண்ணப்பிப்பவர்களுக்கு பெரும் ஆறுதலாக அமையும் எனவும் பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜய சிறி குறிப்பிட்டுள்ளார்.

# தாக்குதலின் கடினமான பக்கத்தில் திறனாக செயற்படக் கூடியவர் குலம்

## மேஜர் குலத்தின் வீரவணக்க உரையில் கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜ்

(முள்ளியவளை)

எனது வலக்கரமாக நின்று தோளோடு தோழனாக நின்று தாயக விடுதலைப்போரின் வெற்றிக்கு வழிசமைத்தவன் மேஜர் குலம் என கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் மேஜர் குலத்தின் இறுதி வீரவணக்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பு வீரவணக்க உரையாற்றும் போது தெரிவித்தார். அவர் மேலும் தொடர்ந்து தெரிவிக்கையில்;

விடுதலைப் போராட்டத்தில் ஆரம்ப கால கட்டத்தில் மிகவும் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்திய மேஜர் குலம் அவர்கள் இவருடைய ஆரம்ப காலகட்டம் என்பது விபரிக்க முடியாததொன்று.

1986 ஆம் ஆண்டு எமது தாயக விடுதலைப் போர் இரகசியமாக நடந்து கொண்டிருந்த வேளை குலம் இரகசியத்தை நன்றாகக் காப்பவன். ஒரு விடயத்தை குறிப்பிட்டால் சரியாக செய்பவன். அந்தக்காலகட்டத்தில் இவரை நான் பல இரகசிய வேவு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியிருக்கிறேன். வேவு நடவடிக்கைகளில் இழப்பில்லாமல் வெற்றிகரமான தாக்குதல்களுக்கு வன்னியில் பல இடங்களுக்கு பல களமுனைகளில் பல தாக்குதல்களுக்கு பல ஆயுதங்களை கைப்பற்றுவதற்கு அங்கே வழிகாட்டியாக அமைந்தவன் மேஜர் குலம்.

குலம் எமது போராளிகளை வேவு ரீதியாக வளர்த்தவன் பல நெடுந்தூர வேவு நடவடிக்கைக்கு பின் மேஜர் குலத்தை பயன்படுத்திய போது பலவிதமான எதிரிகளின் நிலையையும், பலவிதமான ரோந்து நடவடிக்கைகளையும் வரைபடமாகவும் அறிக்கையாகவும் மிகத் திறமையாக சமர்ப்பித்தவன். அந்தக் காலகட்டத்தில் வெற்றிகரமாகப் பல தாக்குதல் நடவடிக்கைகளை நான் குலத்தை வைத்தே செய்தேன். குலத்தை பொறுத்த வரைக்கு ம் அவர் ஒரு பெரிய உச்ச உயர் வீரன் என்றேதான் கருதுகிறேன்.

ஏனெனில் சாள்ஸ் அன்ரனி படையணியில் நான் இவரை இணைத்தபோது பல பயிற்சிகளிலும், பல வேவு நடவடிக்கைகளிலும் பல இராணுவப் பயிற்சிகளிலும் நான் ஈடுபடுத்தியிருந்த வேளை எல்லோருடைய நடவடிக்கைகளையும்விட வித்தியாசமாக அந்தப்படையணியில் திகழ்ந்தவன்.

இதை பார்த்த நான் இவருக்கு இவர் வழி நடத்த பெரிய படையணி ஒன்றைத் தீர்மானித்து சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவில் இவருக்கு ஒரு படையணி வழங்கியதுண்டு ஆரம்பத்தில். அந்த சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவை வைத்து பல தாக்குதல்கள் மேற்கொண்டு பெருமளவான ஆயுதங்களை கைப்பற்றித் தந்தவன் இந்தக் குலம்

தாக்குதல் நடவடிக்கையில் எப்பகுதி கடினமாகவுள்ளதோ அப்பகுதிக்கு குலத்தை நான் பயன்படுத்துவதுண்டு. அதிலும் அவர் வெற்றி கொள்வார் என்பதும் எனக்குத்தெரியும். அப்படியான பலதாக்குதல்களில் நான் குலத்தை பயன்படுத்தியதுண்டு. உதாரணமாக கொக்காவில் சமர் 1990 ஆம் ஆண்டு எங்களுக்கு பெரிய சவாலாக அமைந்தது கொக்காவில் சமரிலே இரண்டு நாட்கள் யுத்தம் நடந்தது. முதல் நாள் யுத்தம் கேள்வியில் முடிந்தது. இரண்டாம் நாள் யுத்தத்திலே முக்கியமான பாதைக்கு குலத்தை நான் நியமித்திருந்தேன். அத்துடன் அவருக்குப் பின்னால் நானும் செல்வதாக முடிவெடுத்திருந்தேன். அப்போது குலம் சொன்னார் நீங்கள் நில்லுங்கள், நிச்சயமாக இந்த முகாமை மீட்டு தருகிறேன். அன்று 7.00 மணிக்கு ஆரம்பிக்கப் பட்ட தாக்குதல் எட்டு மணிக்கு முகாமுக்குள் நின்று குலம் தெளிவாக அறிவித்தார். "நான் உள்ளுக்குள்ளேயே நிற்கிறேன் என்று" அதைதொடர்ந்து உள்ளே சென்று பார்க்கின்றபோது முழு நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக முடித்து அந்த இராணுவ முகாமை வீழ்ச்சியடையச் செய்து 60இற்கு மேற்பட்ட படைகளை கொன்றும், 17 படையினரை உயிருடன் பிடித்தனர். இவ்வாறாக என் னுடன் எனது வலக்கரமாக நின்று தோளோடு தோழ் நின்று உழைத்த வன் மேஜர் குலம். இதேபோன்று 600இற்கு மேற்பட்ட இராணுவம் மாங்குளத்தில் நிலை கொண்டிருந்தஅந்த வேளை நாம் பல பக்கத்தால் தாக்குதலைத் தொடுக்க வேண்டியிருந்தது.

அந்தத் தாக்குதலில் மாவீரர் குலம், மாவீரர் நவநீதன், மாவீரர் சுனித் ஆகிய மூன்று பேரையும் ஆரம்பகட்டத்தில் சண்டைக் களத்தில் நான் இறக்கிவிடுவதில்லை சண்டைக் களத்தில் கடைசிக் கட்டத் தில் தாக்குதல் இறுகும் போது "வாழ்வா சாவா" "நாங்களா அவங்களா" என்று வெல்லுகின்ற கட்டம் வரும் வேளையில் எதிரி உயிரைக் கொடுத்து சண்டை பிடிக்கின்ற நேரத்தில் இவர்களை நான் இறக்கி விடுவதுண்டு. அவ்வேளை இறங்குபவனில் ஒருவன் தான் மேஜர் குலம்.

இதே போன்று எதிரியால் திட்டமிடப்பட்டு 1991 ஆண்டு நடாத்தப்பட்ட மின்னல் தாக்குதல் நடவடிக்கை இந்த நடவடிக்கை மணலாற்றில் இருந்து நாயாறு வந்து அப்படியே முல்லைத்தீவுடன் தொடுப்பதுதான் எதிரியின் திட்டமாக இருந்தது. அப்போது அத்தாக்குதல் எமக்கு சிக்கலாக இருந்தது நவீன ஆயுதங்கள் இன்றி ஏ.கேயுடன் எதிர் சமர் புரிந்த வேளை ஆட்லறி, மோட்டார் பீரங்கி கவசவாகனம் எனப் பெரு மெடுப்பில் முன்னேறிய இராணுவத்தை தடுத்த சமரில் 33 நாட்கள் நடந்த சமரில் சுமார் 200 இற்கும் மேற்பட்டோர் வீரச்சாவடைந்த சண்டையில் வன்னி மண்ணை முல்லை மாவட்டத்தை காப்பாற்றியவன். மணலாறு மாவட்டத்தை காப்பாற்றியவன் என்றால் நான் முதலாவதாக குலத்தைதான் குறிப்பிடுவேன் என்றார்.

# கனேடிய தமிழ் ஊடகவியலாளர் இணையம் சிவராமின் படுகொலையைக் கண்டித்து அறிக்கை

பிரபல ஊடகவியலாளரும் எழுத்தாளருமான 'மாமனிதர்' தர்மரத்தினம் சிவராம் அவர்களின் படுகொலையைக் கண்டித்து நேற்று முன்தினம் கனேடிய தமிழ் ஊடகவியலாளர் இணையமும், கனேடிய தமிழர் பேரவையும் இணைந்து கண்டன அறிக்கை ஒன்றை விடுத்துள்ளன.


சிறிலங்கா அரசாங்கத்தின் புலனாய்வுத்துறையினதும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் தேசவிரோதக் குழுக்களினதும் கூட்டுச் சதியில் பலியான சர்வதேச ஊடகவியலாளர் மாமனிதர் 'தராகி' த. சிவராம் அவர்கள் எப்போதும் துணிச்சலுடன் நின்று தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்தின் நியாயப் பக்கத்தை உலகறியச் செய்வதற்காக உண்மையை உண்மையாய் எழுதி வந்தவர். மண்ணுக்காகவும் மக்களிற்காகவும் வாழ்ந்தவன் அழிக்கப்படுவதில்லை. மக்களின் மனங்களில் ஆழமாக விதைக்கப்படுகின்றான்.

மாமனிதர் சிவராம் தன் பேனா முனையால் தமிழ்த்தேசியத்திற்காக எதிரிகளோடும், துரோகிகளோடும் கடைசி நிமிடம்வரை போராடியவர். தன் எழுத்துத்திறமையால் தமிழர்க்கு இழைக்கப்படும் கொடுமைகளை ஏமாற்றங்களை உலகிற்கு துணிச்சலோடு வெளிப்படுத்தியவர். நம்மத்தியிலுள்ள சில எழுத்தாளர்கள் எதிரிக்கு விலைபோய் தமிழ்த்தேசியத்தை குத்திக்கிழித்து இன்றும் காயப்படுத்திக் கொண்டிருக்கும் போதும், மாமனிதர் சிவராம் யாருக்கும் விலைபோகாமல் தன் இறுதி மூச்சுவரை தமிழினத்திற்காக வாழ்ந்தவர்.

தனக்கு உயிராபத்து இருப்பதை உணர்ந்தும் சிங்களத்தின் குகையில் இருந்து கொண்டு தமிழினத்திற்காய் குரல் கொடுத்தவர். மாமனிதர் 'தராகி' த.சிவராம் அவர்களின் தமிழ்த் தேசிய உணர்வுடன் கூடிய தேசிய பணியை நினைவில் கொண்டு வணக்கம் செலுத்துகிறோம்.

# எதிரணியின் வலைக்குள் சிக்குவாரா லல்லு

அ. கலைவாணி




**இந்திய** அரசியலில் இன்று சூப்பர் ஹீரோவாக எல்லோராலும் திரும்பிப் பார்க்கப்படுவர் புகையிரத அமைச்சரும், முன்னாள் பீகார் முதலமைச்சருமான லல்லுப் பிரசாத்யாதேவ் தான்! இன்றைய சூழலில் எல்லோரது வாயிலும், முணுமுணுக்கும் பெயரும் அவருடையது தான்! ஏனெனில் அவரது பழைய ஊழல் விவகாரம் முதல் பழைய வழக்குகள் வரை அனைத்துமே இன்று அவரை நோக்கி புற்றீசல்களாய் புறப்பட்டிருப்பதே இதற்கு காரணமாகும்.


இரு அவைகளிலும், என்ன நடக்கின்றது என்றால்...லல்லுப் பிரசாத்யாதேவ் பதவியில் இருக்கக்கூடாது என்ற கூச்சலாகவேஇருக்கின்றது. எதிர்க்கட்சிகள் லல்லுவின் புகையிரத அமைச்சர் பதவியை குறிவைத்தே தமது நடடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கின்றன.

இதன் விளைவே இரு அவைகளும் கூடும் போதேல்லாம் எதிர்க்கட்சிகளின் வீண்சண்டை, சச்சரவு ஏற்படுகின்றன. இறுதியில் அவை வெளிநடப்புச் செய்கின்றன.

ஏற்கனவே எதிர்க்கட்சிகளைத் தட்டி வைக்க வேண்டுமென்பதற்காகவே தான் ஆளும் கட்சி, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களது ஊழல் விவகாரங்களை அம்பலப்படுத்தப் போவதாக பறை சாற்றியது. அதிலும், குறிப்பாக எதிர்க்கட்சிகள் அவை புறக்கணிப்பை மேற்கொள்வதை தடுப்பதே இதன் பிரதான நோக்கமாகக் கொள்ளப் பட்டதாகக் கூறப்பட்டது.

ஆனால் மீண்டும் மீண்டும் சளைக்காத விக்கிரமாதித்தன் போலவே தான் எதிர்க்கட்சிகள் தமது நடவடிக்கைகளை விரிவு படுத்தி வருவது போல்தான் தெரிகிறது.

இல்லையேல் ஆளும் கட்சியின் நடவடிக்கைகளைப் பார்த்து எதிர்க்கட்சி வாலைச சுருட்டிக் கொண்டிருக்கத்தான்வேண்டும். மாறாக ஆளும் கட்சியிலுள்ளவர்களுக்கு முக்கியமாக லல்லுப்பிரசாத் யாதேவ்வுக்கு சுருக்குப் போடுவதில்தான் மும்முரம் காட்டுகின்றன. அவற்றின் எதிரொலிதான் இரு அவைகளும் புறக்கணிக்கப்படுகின்றன. லல்லுவை பதவி நீக்கம் செய்யக் கோரி குடியரசுத்தலைவர் வரை சென்றுள்ளனர். ஆக... லல்லுப் பிரசாத் யாதேவ்



எதிர்க்கட்சிகளிடம் வகையாக மாட்டிக் கொண்டமைக்குப் பின் வருவன காரணங்களாக அமைகின்றன.

- மாட்டு தீவன ஊழல்
- தும்கா கருவூல ஊழல்
- வருமானத்திற்கு அதிகமாக சொத்துக குவிப்பு
- வருமான வரி கட்டாமை
- பீகார் வெள்ள நிவாரண ஊழல்
- சபரிமலை புகையிரதம் அடிக்கடி விபத்து

பீகார் முதலமைச்சராக லல்லுப் பிரசாத் யாதேவ் பதவி வகித்த காலத்தில் இந்தியாவையே பெரும் பரபரப்பிற்கு மாட்டுத் தீவன ஊழல் மூலம் உள்ளாக்கியவர். இதனால் உள்ளதும் கெட்டதாய் பதவி பறிபோனது. இதெல்லாம் பழைய கதை.

ஆனால் பாட்னா நீதி மன்றத்தில் மாட்டுத் தீவன ஊழல் தொடர்பான வழக்கு அன்று தொடக்கம் இருக்கின்றமையும், லல்லு உட்பட 76பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றமையும் கூட பழைய சம்பவங்கள் தான்!

ஆனால் புதிய சம்பவம் லல்லு மீதான இந்த வழக்கு மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருப்பது தான்! லல்லு ஊழல் பேர்வழி. புகையிரத அமைச்சர் பதவியில் நீடிக்கக்கூடாது என்பதே எதிர்க்கட்சியினரின் கோஷமாகும்.

இதே போல் தும்கா கருவூலத்தில் கைவைத்தமை எனும் சிக்கலும் லல்லுவுக் குண்டு. இது தொடர்பான வழக்கு சி.பி.ஐ தனி நீதிமன்றத்தில் இருக்கின்றது. லல்லு எதிர்த்து மனுத்தாக்கல் செய்த போதும் அது நிராகரிக்கப்பட்டிருக்கின்றமையும் புதிய தகவல்கள் தான்.

அடுத்து லல்லுவும் அவரது மனைவி ரப்ரிதேவியும், வருமானத்திற்கு அதிகமாக சொத்துக் குவித்ததான குற்றச்சாட்டும் மெருகூட்டப்பட்டிருக்கின்றது. பாட்னா நீதி மன்றம் மீண்டும் இந்த வழக்கை எதிர்க்கட்சிகளின் கைங்கரியத்தால் விசாரிக்கத் தொடங்கியுள்ளது. லல்லு நீதிமன்றில் மூன்று மாத பிணைக்கு அனுமதி பெற்ற பின்னரே தான் வெளியில் நடமாடிக் கொண்டிருக்கின்றார்.

அத்துடன் லல்லுப்பிரசாத் 1986-1996 வரை வருமான வரி கட்டாமல் மோசடி செய்துள்ளதாக பாட்னா நீதிமன்றில் வழக்கு இருக்கின்றது. அதுவும் 40 இலட்சம் ரூபா கட்டப்படவில்லை என்பதே லல்லு மீதான குற்றச்சாட்டு.

இதேவேளை இந்த வழக்கும் அண்மையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டதில் லல்லுப் பிரசாத் ரப்ரிதேவிக்கு எதிராக இதுவரை மத்தியரசு பதில் மனுத் தாக்கல் செய்யவில்லை என்று உச்ச நீதி மன்றம் மத்திய ரசைக் கண்டிக்கின்றது. இதனால் வருமான வரி வழக்கு லல்லுவுக்கு இறுக்கத்தைக் கொடுக்கும் என்று எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக் கின்றது.

அடுத்து கடந்த வருடம் வட மாநிலங்களில் வெள்ளம் ஏற்பட்டது. இதன் போது பீகாரும் பாதிக்கப் பட்டது. இதன் போது நிவாரணம் வழங்கப் பட்டதில் ஊழல் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் புதிதாக ஒரு குற்றச்சாட்டைத் தூக்கியுள்ளன. பீகாரில் அப்போது லல்லுவின் மனைவியே (ரப்ரிதேவி) முதலமைச்சர் பதவியில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது அடிக்கடி சபரிமலை எக்ஸ்பிரஸ் விபத்துக்குள்ளாகி வருகின்றது. இது லல்லுவின் கவனக்குறைவு என்பது எதிர்க்கட்சிகளின் கோஷம். ஏதோ லல்லு புகையிரத ஓட்டுநர் போலவும், அவரது கவனக் குறைவே புகையிரத விபத்து போன்றே தான் எதிர்க்கட்சி வீண்வாதம் செய்வதாக லல்லுவின் பக்கத்திலிருந்து எழும் வினாக்கள் ஆகும்.


இவற்றை விடவும், ரப்ரிதேவி பீகாரில் முதலமைச்சராக பதவி வகித்த காலத்தில் ஆட்சி நல்லவிதமாக நடக்கவில்லை என்று பீகார் ஆளுநர் பூட்டாசிங் குற்றம் சாட்டியுள்ளார் என்பதும் அவதானிக்கத்தக்கது.

ஆக...லல்லுப் பிரசாத்தை புகையிரத அமைச்சர் பதவியிலிருந்து தூக்கி எறிய வேண்டு மென்பதே எதிர்க்கட்சிகளின் பிரதான நோக்கமாகும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் ஏன் லல்லு மீது மட்டும் குறி வைக்கப்பட்டுள்ளார் என்றால் அதற்கும் வலுவான காரணங்களைக்காண முடிகின்றது.

அந்த வகையில் லல்லு புகையிர அமைச்சர் பதவியில் இருந்து கொண்டு எதிர்க்கட்சினர் மீது அம்புகளை செலுத்தியமையே முக்கிய காரணமாகும்.

இதன்படி பாபர் மசூதி இடிப்பில்


லல்லு

அத்வானிக்கும், உமாபாரதிக்கும் உள்ள தொடர்பை நேரடியாகப் பார்த்த முன்னாள் டைம் பத்திரிகை செய்தியாளர்கள் ஜெ.'ப் பென் பர்த்தியையும் அனிதா பிரதாப் பையும் (லிபர்ஹான்குழு) அயோத்தி வழக்கை விசாரணை செய்யும் குழு விசாரணை செய்ய வேண்டுமென்று அத்வானிக்கு ஆப்பு வைக்க முனைந்துள்ளார்.

அது மட்டுமன்றி அத்வானி மீதுள்ள மிகவும், அரதப் பழசான குற்றச் சாட்டொன்றையும் புதுப்பித்திருக்கின்றார். முகமது அலி ஜின்னாவைக் கொல்ல நடந்த சதியில் பங்கிருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டு, பாகிஸ்தானால் தேடப்பட்டு வரும் குற்றவாளி அத்வானி என்பது அத்வானி மீதான இரண்டாவது குற்றச்சாட்டு.

முன்னாள் நிதி அமைச்சர் யஷ்வந்த் சிங்ஹா 26 வருடத்திற்கு முன்பு கடுகு எண்ணெய் ஊழல் செய்ததாக வழக்குள்ளது. இதனை மீண்டும் பொலிவு படுத்தியுள்ளார் லல்லு. தேசிய ரீதியில் இவர்களுக்கு ஆப்பு வைக்க நினைக்கும் லல்லு மாநிலத்தி லும் இவருக் கெதிராக குற்றச் சாட்டுக்களை முன்னெடுத்துள்ளார்.

நிதிஷ்குமார் புகையிரத அமைச்சராக இருந்தபோது ரூபா 200 கோடி மதிப்புள்ள புகையிரத ஸ்லீப்பர் வாங்கியதில் ஊழல் நடந்துள்ளதாக சி.பி.ஐ விசாரணை நடத்த வேண்டு மென்கிறார்.

அடுத்து லல்லு கண் வைத்திருப்பது குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடியை. 58 பேர் இறந்த 2002 கோத்ரா புகையிரத தீ வைப்பு விவகாரத்தை முன்னாள் நீதிபதி யு.சி.பானர்ஜி தலைமையில் உயர்மட்ட குழு விசாரணை நடத்த அமைச்சரவையில் அனுமதி பெற்றிருக்கிறார்.

ஆக மொத்தம் லல்லு எதிர்க்கட்சியினருக்கு வலைவிரித்தார் என்றால் எதிர்க்கட்சியினரே லல்லு மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்துவது போன்றே பதில் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருக்கின்றனர் எனலாம்.

இதேவேளை எதிர்க்கட்சியினரின் இம்சை ஒரு புறமும் லல்லுவை பதவியிலிருந்து அகற்ற முடியாத திண்டாட்டம் மறுபுறமுமென இரு தலைக்கொள்ளி எறும்பாய் மத்தியரசு திண்டாடுகின்றமை வெளிப்படை.

பிரதமர் மன்மோகன்சிங் அவசர அவசரமாக லல்லு, சோனியாகாந்தி இருவரையும் சந்தித்து தனது பதவிவிலகல் மறுப்பைத் தெரிவித்துள்ளார் என்று ஊகம் வெளிப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே லல்லு கூட்டணி ஆட்சியில் அங்கம் வகிப்பதனால், மத்தியரசு லல்லுவை மிக சுலபமாக கழட்டி விட முடியாது என்பதும் இருக்கின்றது.

என்றாலும் எதிர்க்கட்சியினரே லல்லுவை விடாமல் வட்டமிடுகின்றனர். லல்லுவின் பதவி பறிக்கப்படுமா..? என்பதை விடவும் தற்போதைய நிலையில் லல்லுவின் பதவி கேள்விக் குறியாகியுள்ளது; அந்தரத்தில் தொங்கிக்கொண்டுள்ளது என்பதே இப்போதைய நிலைமைகள் என்றால் மிகையில்லை.

● ● ●




ஜெயந்திரன்

# நவீனத்தொடர்

**20இற்கு20** ஓவர் கொண்ட கிரிக்கெட் தொடர் தற்போது ரசிகர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிநவீன தொடர் இது. இங்கிலாந்து-அவுஸ்திரேலிய நாடுகளில் வலம் வந்து தற்போது ஆசியாவிலும் நுழையத் தொடங்கியிருக்கிறது.

சுறு சுறுப்புக்கு பெயர் பெற்ற இந்தத்தொடர் அனைத்து நாடுகளுக்கும் வருமா? இதனால் என்ன பயன்? கிரிக்கெட்டை போலவே 20 ஓவர் போட்டிகள் உருவானதும் இங்கிலாந்தில் தான். டேவிட் பெக்காமின் கவர்ச்சியில் ஈர்க்கப்பட்டு இங்கிலாந்து விளையாட்டு ரசிகர்கள் கால்பந்து நோக்கி கவனம் செலுத்த தொடங்கினர். அப்போது பிறந்தது தான் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி.



இதுவும் ஒருவகையில் ஒருநாள் போட்டிகள் போல்தான். ஒவ்வொரு அணியும் 20 ஓவர் விளையாட வேண்டும். ஆறு அல்லது எட்டு ஓவர்கள் வரை எல்லைக் கோட்டருகே இரண்டு களத்தடுப்பாளர்கள் மட்டுமே நிறுத்தப்படுவர். ஒரு வீரர் ஆட்டமிழந்ததும் அடுத்த வீரர் இரண்டு நிமிடத்திற்குள் களமிறங்க வேண்டும். 90 நிமிடங்கள் போட்டிகள் நடத்தப்படும். பந்து வீச்சாளர் மாற்றம் பந்துவீசும் நேரம் இவற்றையெல்லாம் குறைந்த நேரத் திற்குள் முடிக்க வேண்டும். ஒரு அணி ஆடி முடித்ததும் 15 நிமிடத்துக்குள் களமிறங்க வேண்டும். ரசிகர்கள் மூச்சுவிடக் கூட நேரமில்லாது போட்டியை ரசிக்கலாம்.அந்தளவுக்கு விறுவிறுப்புத்தன்மை காணப்படும்.


இதனால் வீரர்களுக்கு என்ன பலன்? ஒரு நாள்போட்டியில் ஆரம்பத்தில் இரண்டு விக்கெட்டுக்களை விரைவாக வீழ்த்தி விட்டால் அடுத்து வரும் வீரர்கள் தடுப்பு ஆட்டமாடி ஓட்ட வேகத்தை மந்தமாகக் கொண்டு செல்வர். இதனால் ஓட்ட எண்ணிக்கை பாதாளத்துக்கு சென்று விடும். இந்த நிலை இப்போட்டியில் காணமுடியாது.

20 ஓவர் போட்டிகளில் வீரர்கள் நெருக்கடியில்லாமல் விளையாடலாம். களத்தில் இறங்கும் வீரர் அடித்து விளையாட முற்படுவதோடு, ஆட்டமிழக்காமல் விளையாடவும் முயற்சிப்பர். இதனால் களத்தடுப்பாளர் இல்லாத திசையில் ஓட்டங்களை குவிக்க துடுப்பாட்ட வீரர்களுக்கு சிறப்புப் பயிற்சி தேவைப்படுகிறது. பவுண்டரியும், சிக்சர்களையும் விளாசும் வீரரை அடக்கி வாசிக்க வைக்க பந்து வீச்சாளர்களும் சாமர்த்தியமாக பந்துவீச வேண்டியது அவசியமாகிறது. களத்தடுப்பாளர்களும் எந்நேரமும் பந்து நமது பக்கம் வருமோ என்ற எண்ணத்திலே காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்படும். மொத்தத்தில் கிரிக்கெட்டின் அனைத்து துறைகளும் துடிப்பாக செயற்பட வேண்டிய ஒரு தொடராக 20 ஓவர் போட்டி விளங்குகின்றது.

# சடுதியான முன்னேற்றம்

**சர்வதேச** கிரிக்கெட் அணியொன்று தனது சரிவிலிருந்து வேகமாக மீள்வதென்பது ஒன்றும் சாதாரண விடயமல்ல.

இதற்கு அணியில் இடம் பெற்றுள்ள துடுப்பாட்ட வீரர்கள் மீண்டும் தமது துடுப்பாட்டத்திறனை வெளிப்படுத்துவது முக்கியமாக அமைகின்றது.



இந்த வகையில் கடந்த ஒருவருடமாக மோசமான பின்னடைவைச் சந்தித்து சர்வதேச கிரிக்கெட் தரவரிசையில் பின்னுக்கு தள்ளப்பட்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.

காலத்துக்குக்காலம் உச்சமாக தனது



திறனை வெளிப்படுத்தும் தென்னாபிரிக்கா இதுவரை உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றாதது குறையாகவே இருந்து வருகின்றது. இருந்தும் 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கிண்ணத்தை கைப்பற்றக் கூடிய அணியாக கணிக்கப்பட்டது. ஆனாலும் துரதிஷ்டவசமாக அரையிறுதி வாய்ப்பைக் கூட பெறமுடியாது சொந்த நாட்டிலேயே சோகத்தை சந்தித்தது.

இதனால் பல்வேறு விமர்சனங்களுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் வீரர்கள் உள்ளாகினர். இதன் எதிரொலியாக பொலக்கிடம் இருந்து அணித்தலைவர் பதவி பறிக்கப்பட்டு வயதில் குறைந்த இளம் வீரர் சிமித்திடம் அப்பதவி வழங்கப்பட்டது. இதனை விட சில வீரர்கள் அணியிலிருந்து விலக்கப்பட முன்னணி வீரர்கள் சிலர் ஓய்வு பெற்றனர். ஆனாலும் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காததும், முன்னணி பந்துவீச்சாளர்களின் காயமும் அணி பல தோல்விகளை சந்திக்க காரணமானது. இதனால் அணி தரவரிசையில் பின் நோக்கி சென்றதுடன் அணித்தலைவர் சிமித்துக்கு வீரர்கள் ஒத்துழைப்பு வழங்க மறுக்கிறார்களா என்ற கேள்வியையும் பல மட்டங்களிலும் எழுப்பியது.

இது அணிக்குள் புதிய வீரர்களை வரவழைக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்த அவர்களும் சிறப்பாக ஆட அனுபவ வீரர்களும் தமது பழைய நிலைக்கு திரும்ப தற்போது தென்னாபிரிக்க அணி கலக்குகிறது.


சொந்த மண்ணில் சிம்பாப்வே-நியூசிலாந்து அணிகளை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றி தற்போது மேற்கிந்தியத்தீவு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள அங்கும் அதற்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியதுடன் தற்போது நடைபெற்று வரும் ஒரு நாள் தொடரிலும் முன்னிலை வகிக்கிறது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் அணித்தலைவர் சிமித்தின் ஆட்டம் தான். அவர் டெஸ்ட் போட்டியில் மூன்று சதங்களை அடித்ததுடன், முதலாவது ஒரு நாள் போட்டியிலும் சதமடித்து அசத்தியுள்ளார்.

இதனை விட பந்துவீச்சு அபாரம் அனைவரும் சிறப்பாக செயற்படுகின்றனர். இது ஒரு வகையில் அவுஸ்திரேலியவை ஒத்ததாக காணப்படுகின்றது. எனவே இதன் வேகம் தொடரின் தரவரிசையில் தென்னாபிரிக்காவை உயர்நிலைக்குக் கொண்டு சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# பிரபலம் ஒன்று விடைபெறுகிறது

**உலகின்** பிரசித்தமான கால்பந்தாட்ட நட்சத்திரவீரர் ஒருவர் நோய்வாய்ப்பட்டு அவசரமாக ஓய்வு பெற்று சென்றுவிட்டார். அவர் யாருமல்ல கால் பந்தாட் டத்திற்கென ஓர் இடத்தை தக்க வைத்திருந்த ஆர்ஜன்டினாவின் கப்ரியல் பெட்டிஸ்ட்டுட்டா என்ற தலைசிறந்த வீரராவார்.



1969 ஆம் ஆண்டில் ஆர்ஜன்டினாவில் பிறந்த இவர் 1991 ஆம் ஆண்டு சர்வதேச கால்பந்துப் போட்டியில் பிரவேசித்தார். அவர் பிரேசிலுக்கு எதிரான சினேகபூர்வ ஆட்டம் ஒன்றில் ஆர்ஜன்டினா சார்பில் கலந்து கொண்டார். தனது சீருடையில் ஒன்பதாம் இலக்கத்தை பொறித்துள்ள அவர் தொடர்ந்து ஆர்ஜன்டினாவுக்கு வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அவர் ஓய்வு பெறும் வரை 78 போட்டிகளில் 58 கோல்களை அடித்துள்ளார். அவரது அணியில் அவர் மாத்திரமே அத்தனை கோல்களை அடித்தவராவார்.


"பட்கோல்" என செல்லமாக அழைக்கப்படும் இவர், மரடோனாவுக்குப் பின்பு ஆர்ஜன்டினா பெற்றுத் தந்த சிறந்த வீரராவார். 1994 ஆம், 1998 ஆம், 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் சிறப்பாக ஆடிய இவர், 1998 ஆம் ஆண்டு பிரான்சில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் சிறப்பாக ஆடினார். எனினும் தனது காலத்தில் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியாமல் போனமை அவருக்கு பெரும் வேதனையை அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

தமது கால்பந்தாட்ட வரலாற்றில் பெரும்பாலான காலத்தை இத்தாலியில் கழித்த அவர் 1991 ஆம் ஆண்டு முதல் பியொரென்டினா அணிக்காக விளையாடியுள்ளதுடன் அதிக கோல் அடித்தவருமாக திகழ்கின்றார். 1995 இல் இத்தாலியில் நடைபெற்ற முக்கிய லீக் போட்டிகளில் அதிக கோல்களை அவர் அடித்துள்ளார். பின்னர். 2000 ஆம் ஆண்டில் றோமோ கழகத்தில் இணைந்தார். அதன் பின்னர் 2003 முதல் ஓய்வு பெறும் வரை டோகா கட்டாரில் அல் அராபி கழகத்துக்காக விளையாடி வந்தார். இவரின் ஓய்வு கால் பந்தாட்டதுறைக்கு பெரும் அதிர்ச் சியை அளித்துள்ளது. ஆகவே மரடோனாவின் பின்னர் ஆர்ஜன்டினா நாட்டவரான பெட்டிஸ்டுட்டா ஓய்வு பெறுவது அந்தநாட்டுக்கு பாரிய இழப்பாகும்.




வடிவேல்

# ஆயிரம் பரிசு வென்றவர்




**சர்வதேச** கோல்ப்களத்தில் கடந்த காலங்களில் கொடிகட்டிப்பறந்தவர் அமெரிக்காவின் டைகர் வூட்ஸ் என்பவர் ஆவார்.

அண்மைக்காலத்தில் அவர் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டிருப்பினும் சற்றுத்தளராமல் மீண்டும் முதலாமிடத்தைப்பிடிக்க முயன்று வருகிறார். கடந்த வருடம் அவரை வீழ்த்தி விஜேசிங் என்பவர் முதலாமிடத்தைப்பிடித்துள்ளார்.

1994 முதல் 264 வாரகாலமாக இவர் முதலாமிடத்தை தக்க வைத்து வந்தார். இக்காலப்பகுதியில் அவர் முதல் தரபோட்டிகள் 32 இல் வெற்றி பெற்றா பத்து லட்சம் ரூபாய் பெறுமதியான பரிசுகள் ஆயிரம் வரை அவர் பெற்றுள்ளார். இவர் 1996 ஆம் ஆண்டிலேயே சர்வதேச போட்டிகளில் இணைந்தார். அவற்றில் 60 போட்டிகளில் வெற்றி பெற்றார். வருடாந்தம் நடைபெறும் கிராண்ட் ஸ்லாம், அமெரிக்க ஓபன், பிரிட்டன் ஓபன் P.G.A கிண்ணம் போன்ற நான்கு தொடர்களிலும் வெற்றி பெற்றார். தரவரிசையில் டைகர் வூட்ஸ் ஐந்தாவது இடத்தை வகிக்கிறார்.

இவர் மீண்டும் முதலாமிடத்தைப் பிடிக்கும் எண்ணத்தில் உள்ளார்.வி.ஜேசிங் பி.ஜி. நாட்டவராதலால் அமெரிக்காவை விட வேறொருவர் முதலாமிடத்தைப் பிடித்துள்ளமை அமெரிக்க ரசிகர்களுக்கு சகிக்க முடியாததாகியுள்ளதாக கூறப்படுகிறது. அதனை இவர் நிறைவேற்றுவாரா என்பதை அவரே தீர்மானிப்பார்.

# 1994 இல் உறுதியளித்தபடி அரசு தனியார் மயத்திட்டத்தை மேற்கொள்ளாது

## –சனாதிபதி தெரிவிப்பு

அரசாங்கம் 1994 ஆண்டு உறுதியளித்தபடி தனியார் மயத் திட்டம் எதனையும் மேற்கொள்ளப் போவதில்லை என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பத்தாயிரம் குள அமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்ட ஆரம்பம் நேற்றுமுன்தினம் அநுராதபுரம் கஹட்டகஸ்திகலியவில் நடைபெற்ற போது அங்கு சனாதிபதி உரையாற்றினார்.

சிறிலங்கா மின்சாரசபை நாளுக்கு நாள் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

கடந்த 11 மாதக்காலப்பகுதியில் மின்சார சபையை மறுசீரமைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

முன்னர் மின்சார சபைக்கு 60 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருந்தது.

தற்சமயம் அது 90 பில்லியன்களாக மாறியுள்ளது. எனவே நட்டம் ஏற்படாத வகையிலேயே மின்சாரசபையை மறுசீரமைக்கப் போகிறோம்.

நாட்டை முன்னேற்றும் வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனைத்துக் கட்சிகளும் உறுதியுடன் செயற்படவேண்டும். நாட்டு மக்கள் என்று வீட்டுக்கு போகச்சொல்கிறார்களோ அன்று சனநாயக வழியில் ஆட்சியை விட்டு விலகுவதே எனது கொள்கையாகும்.

நாட்டில் விலையேற்றங்கள் ஏற்பட்டாலும் நாட்டின் பொருளாதாரம் பலமாக உள்ளது.

மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் அர்பணிப்புடன் செயற்படும். மக்களின் தேவைகளையும், அபிலாசைகளையும் பூர்த்தி செய்வதற்காகவே பதவியிலிருக்கும் அரசாங்கத்தை மக்கள் தெரிவு செய்தார்கள். மக்களின் அபிலாசையைப் பூர்த்தி செய்ய யதார்த்தமான நடவடிக்கை எடுக்கப்படும். யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்க எவரும் விரும்பவில்லை. நாடு பிளவு படாமல் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண வேண்டும். விவசாயத் துறையின் அபிவிருத்திக்குபல வசதிகள் செய்து கொடுக்கப்படும். புள்ளி விபரங்களின்படி நாட்டின் வறுமை குறைந்துள்ளது. ஒருவரின் சராசரி வருமானம் அதிகரித்துள்ளது. கிராமப்புற அபிவிருத்திக்கும் அரசாங்கம் பல்வேறு நடவடிக்கை எடுத்துள்ளது என சனாதிபதி தமது உரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேதவிபரங்கள் திரட்டும் பணி பூர்த்தி

சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப்பகுதி சேதங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டும் பணிகள் அனேகமாகப் பூர்த்தியடைந்துள்ளதாகத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்கு அதிகாரசபை விசேட மதிப்பீட்டுப் பிரிவொன்றை நியமித்துள்ளதுடன், கரையோரப் பகுதிகளில் முற்றாகச் சேதமடைந்த வீடுகளுக்கு இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும், பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கு ஒரு லட்சம் ரூபாவையும் வழங்குவதற்கு அதிகாரசபை தீமானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீடுகளைப் புனரமைப்பதற்கு அதிகாரசபை தொழில் நுட்ப உதவிகளையும் வழங்கும் எனவும் இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ சமூகத்தினருக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதுடன், திரட்டப்படும் தகவல்களின் அடிப்படையில் மீன்பிடி அமைச்சின் மேற்பார்வையில் மட்டுமே இவை வழங்கப் படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றன.


## சுனாமி தாக்கத்தினால் இழந்த ஆவணங்களை மீளப்பெறல்

சுனாமி தாக்கத்தின்போது தமிழீழ மோட்டார் ஊர்தி ஆவணங்களை இழந்தவர்களின் நன்மை கருதி போக்குவரத்துக் கண்காணிப்பிரிவு முல்லைத்தீவு பிரதேசசெயலகத்தில் மீளவும் 11.05.2005 ஆம் திகதி இயங்கவுள்ளதால் ஆவணங்களை இழந்தோர் குறிப்பிட்ட திகதியில் சென்று காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணிவரை தங்களது ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் மீளவும் அறியத்தருகின்றனர். இம் முயற்சிக்கு ஊர்தி உரிமையாளர்கள் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

'நன்றி'

(சி.11846)



## மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும், நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும்
கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை
அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு [ஆங்கில, தமிழ்] பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

**இடம்:-** யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்

**காலம்:-** 2005மே மாதம் 07ஆம் திகதி முதல் 15 ஆம்திகதிவரை

**நேரம்:-** காலை 9.00 மணிமுதல் மாலை 6.00மணிவரை (புதியநேரம்)(வாரஇறுதி நாட்களும் விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்புவிலைக்கழிவு

தொடர்புகளுக்கு,
தலைவர்,வணிக மாணவர் மன்றம்,
யாழ்-பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.

(சி.11857)



## உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாணசபை
# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (நீகோட்)
## நிதி-ஆசிய அபிவிருத்தி வங்கி
## ஆ.அ.வ கடன் இல:-2084-சிறீ (எஸ்.எவ்)

# கேள்வி அறிவித்தல்–இல:41

01. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (NECORD-Ext) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னால் தொழில் தருனராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச்சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| KN/NECORD-Ext/ED/01 | கிளிநொச்சி மகாவித்தியாலயம் மீளமைப்பு கட்டம்-1-மூன்று மாடிக் கட்டடம் 110'x 25', 2 மாடிக் கட்டடம் 110'x 40', குடிநீர் வசதி மற்றும் மலசல கூடத்தொகுதி. | M4 கட்டடங்கள் | 431,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD டுடன் M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடித்ததுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ஆம் திகதிக்குப் பின்பு தங்களை ஒப்பந்தக்காராகப் பதிவு செய்து ஒத்ததன்மையான வேலைகளை நல்ல முறையில் செய்து முடித்த ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரராகவோ இருக்க வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரல் ஒன்று வழங்குமாறு கேள்விகோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்த காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55,கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி:026-2227434, ஃபக்ஸ்:026-2227401, இணையத்தள முகவரி:www.necord.org, ஈமெயில்:necord@sltnet.lk)

06. கேள்வி ஆவணங்களை 09.05.2005 இல் இருந்து 27.05.2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 5,000/- ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்",55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு 1.06.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்வி தாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.

08. முற்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 27.05.2005 திகதியன்று காலை 11.30 இற்கு நடைபெறும்.

09. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியை கேள்விகோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இதன் தொடர்பாக பந்தி 07 இல் குறிப்பிட்டுள்ள இடம்,திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக மாட்டார்.

*த. லங்காநேசன்,*
*தலைவர், கேள்விச்சபை,*
*வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்,*
*55,கந்தசுவாமி கோவில் வீதி,*
*திருகோணமலை.*

(சி.11849)

# நிதிஷ்குமார் தலைமையில் பீகாரில் புதிய ஆட்சி அமையும்

## -பாரதீய ஜனதா நம்பிக்கை

(புதுடில்லி)

பீகார் சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக் காததால் சனாதிபதி ஆட்சி அமுல் படுத்தப்பட்டுள்ளது. அங்கு புதிய ஆட்சியமைக்க அரசியல் கட்சிகள் தீவிர நடவடிக்கை எடுத்து வரு கின்றன.

பீகாரில் முடிவைத் தீர்மானிக்கும் கட்சியாக இருக்கும் லோக் சனசக்தி கட்சித்தலைவர் ராம் விலாஸ் பஸ் வான் பா.ஜனதா மற்றும் லல்லு கட்சி இல்லாத புதிய ஆட்சி அமைக்க வேண்டும் என்று கூறி வருகிறார்.

இந்த இரண்டு கட்சிகளில் ஒன்று இல்லாமல் புதிய ஆட்சி அமைக்க முடியாது என்பதால் தொடர்ந்து குழப்ப நிலை நீடித்து வருகிறது. இதற்கிடையே இன்னும் 15 நாட்களில் ஐக்கிய ஜனதா தளம் கட்சித் தலை வர் நிதிஷ்குமார் தலைமையில் பா.ஜனதா கூட்டணி புதிய ஆட்சி அமைக்கும் என்று முன்னாள் மத் திய மந்திரி ஷாநவாஸ் உசேன் தெரிவித்திருக்கிறார். இது தொடர்பாக அவர் கூறியதாவது;

பாராளுமன்றத் தேர்தலில் லல்லு கட்சி சின்னமான லாந்தர் விளக்கு வெளிச்சம் தேசிய சனநாயகக் கூட்ட ணியை வீழ்த்தி விட்டது. ஆனால் சட்டசபைத் தேர்தலில் லாந்தர் விளக்கு வெளிச்சம் அணைந்து இருளாக மாறிவிட்டது.


பீகாரில் புதிய ஆட்சி அமைக்க முடியாத சூழ்நிலை நிலவுகிறது. ஆனால் விரைவில் அந்தச் சூழ்நிலை மாறும். இன்னும் 15 நாட்களில் நிதிஷ்குமார் தலை மையில் தேசிய சனநாயகக் கூட் டணி புதிய ஆட்சி அமைக்கும்.

இதற்கு தேவையான எம்.எல்.ஏ. க்களின் ஆதரவை பெற கட்சிகளை உடைக்கமாட்டோம். ஆனால் புதிய அணி உருவாக்கப் பாடுபடுவோம். ஒரு முஸ்லிமை முதல் மந்திரியாக்க வேண்டும் என்ற பஸ்வானின் கோரிக்கை நிரந்தரமானது அல்ல. அது பீகாரில் மதவாத அரசிய லுக்கு வழிவகுக்கும்.

...ில் பஸ்வான் கட்சி பெரும் பான்மை பெற்று இருந்தால் அவரோ அல்லது அவரது தம்பியோ முதல் மந்திரியாகி இருப்பார்கள். தற் போது அது சாத்தியமில்லை என்ப தால் இது போன்ற கோரிக்கையை எழுப்புகிறார்.

முஸ்லிம்களுக்கு அரசியலில் நல்ல பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிற பஸ்வான் மத்திய மந்திரி சபையில் முஸ்லிம்களுக்கு கூடுதல் இடம் கேட்டுப் போராட வேண்டும். தேர் தல் ஆணையாளர்கள் டாண்டன், கோபாலசுவாமி ஆகியோர் மீது தேர்தல் அதிகாரி சப்தரிஷி கூறிய குற்றச்சாட்டு மோசமான முன் உதா ரணமாகும். ஓய்வு பெறும் நிலை யில் இருக்கும் அவர் இப்படிச் செய்வது நல்லதல்ல இவ்வாறு அவர் கூறினார்.

# ஒட்டகத்தின் மேல் சவாரி செய்யும் நாய்



ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பாலைவனப் பகுதியில் பொருட்களை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்ல ஒட்டகத்தைப் பயன்படுத்துகிறார்கள். மிஸ்ராடு நகரில் ஒரு ஒட்டகம் செல்ல பிராணி நாய் மற்றும் வீட்டுப்பொருட்களை சுமந்து செல்லும் காட்சி.

# சோனியாவே மீண்டும் காங்கிரஸ் தலைவர்

(புதுடில்லி)

காங்கிரஸ் கட்சியின் தலைவராக சோனியா காந்தியே மீண்டும் தேர்வாவதற்கு பிரகாச வாய்ப்பு உள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது மாநிலங்களில் கட்சி அமைப்புத் தேர்தல்கள் நடந்து வருகின்றன.

எட்டு ஆண்டுகளுக்கு முன் 1997 இல் காங்கிரஸ் தலைவராக சோனியா காந்தி பொறுப்பேற்ற கட்டத்தில் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் மூன்று மாநிலங்களே இருந் தன. தற்போது 15 மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி நடை பெறுகிறது. இது தவிர மத்தியிலும் அதன் ஆட்சி நடக்கிறது. எனவே சோனியா தலைமையே நீடிக்க வேண்டும் என்பதே கட்சியில் நில வும் பரவலான கருத்து என்று கட்சி யின் முக்கிய வட்டாரங்கள் தெரி வித்தன.

மாநிலங்களில் கட்சி அமைப்புத் தேர்தல் மே 31இற்குள் முடிவடைந்த தும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் இரண்டு நாள் கூட்டத் தொடருக்கான திகதி அறிவிக்கப் படும். அந்தக் கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேர்ந் தெடுக்கப்படுவார். இந்தக் கூட்டம் ஆகஸ்ட் 20,21 இல் நடைபெறக் கூடும். இந்தக் கூட்டத்தை ஹைதரா பாத்தில் நடத்த விருப்பம் தெரிவித் துள்ளார். ஆந்திர முதல்வர் எஸ்.ராஜசேகர ரெட்டி. ஆனால் 20 ஆயிரத்துக்கும் அதிகமான கட்சிப் பிரதிநிதிகளும், கட்சித் தொண்டர் களும் இந்தக் கூட்டத்துக்கு திரளு வார்கள் என்பதால் சூரஜ்கண்ட் நகரில் இந்தக் கூட்டம் நடக்கும் என்று கட்சி வட்டாரத்தில் பேச்சு நிலவுகிறது.

# இந்தியாவின் நம்பிக்கைக்குரிய நண்பன் ரஷ்யா

## மாஸ்கோ செல்லும் முன்பு மன்மோகன்சிங் பேட்டி

(புதுடில்லி)

இந்தியாவின் நம்பிக்கைக்குரிய நண்பன் ரஷ்யா. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடனான எனது ஆலோசனைகள் இந்திய ரஷ்யா இடையேயான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இருக் கும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

இரண்டாம் உலகப்போரின் போது ஜேர்மன் மீது முன்னாள் சோவியத் குடியரசு இராணுவம் போர் தொடுத்தது. இந்தப் போரில் சோவியத் குடியரசு இராணுவம் வெற்றிபெற்றது. இருப்பினும் ஏரா ளமான சோவியத் குடியரசு இரா ணுவ வீரர்களும் அப்பாவி மக்க ளும் பலியானார்கள். சோவியத் குடியரசு இராணுவம் வெற்றி பெற்று 60 ஆண்டுகள் ஆகிவிட்டது. இதைக் கொண்டாடும் வகையில் ரஷ்யா வின் தலைநகரான மொஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தில் நேற்று முன்தினம் பிரமாண்டமான விழா நடைபெற்றது. அங்குள்ள இராணுவ வீரர்களின் நினைவுத் தூபிக்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளே யர், இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங், சீன அதி... ந்தாவோ உட் பட 55 நாடுகளின் தலைவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத் தினார்கள்.

இந் நிகழ்ச்சி முடிந்ததும் உலகத் தலைவர்களுக்கு ரஷ்ய அதிபர் புடீன் விருந்தளித்தார். அப்போது அதிபர் விளாடிமிர்புட்டீனை பிரத மர் மன்மோகன் சிங் சந்தித்துப் பேசினார். மேலும் அமெரிக்க அதிபர் ஜோஜ்புஷ், சீன அதிபர் ஜிந்தாவோ, ஆகியோரையும் புட் டின் தனித்தனியே சந்தித்துப் பேசி னார்.

கிளிநொச்சி நகரில்!!
புகைப்படத்துறையில் புதிய அத்தியாயம்!!!
DIGITAL Studio அறிமுகம்
பாஸ் மற்றும் சகல அடையாள அட்டைப் படங்களையும்10 நிமிடத்தில் வழங்குகின்றோம்.
யாழ். ஒளி (K.S.R. PHOTOS)
வீடியோ புகைப்படச்சேவை
இல.05,கனகபுரம் வீதி, சந்தைக்கு அருகாமை, கிளிநொச்சி (6114)

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவர் வெட்டிக்கொலை

(புதுடில்லி)

கேரள மாநிலம்-திரிச்சூர் மடக் காதலைப் பகுதி இந்திய கம் யூனிஸ்ட் கட்சித்தலைவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

24 வயதான ரெஜி என்பவரே வெட்டிக் கொல்லப்பட்டவராவர். இவர் அப்பகுதி பேருந்து தரிப்பு நிலையத்தில் நின்றிருந்த வேளை அங்கு வந்த ஒரு கும்பல் ரெஜியை சரமாரியாக அரிவாளால் வெட்டி யது. இதில் ரத்த வெள்ளத்தில் துடித்த ரெஜி பரிதாபமாக உயிரிழந் தார்.

இது குறித்த தகவலின் பேரில் திரிச்சூர் காவல்துறை டி.எஸ்.பி. வில்சன் விரைந்து சென்று விசா ரணை நடத்தினார். அப்போது தேர்தல் முன்விரோதத்தில் இந்தக் கொலை நடந்தது தெரிய வந்தது. கொலைசெய்த கும்பலை கண்டு பிடிக்க தனிப்படை அமைக்கப்பட் டுள்ளதாக அவர் தெரிவித்துள் ளார்.


# அறிவித்தல்

## வடக்கு ,கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம்,தலைமைச் செயலகம்,கிளிநொச்சி.

## வருடாந்த பொதுக் கூட்டம்

| இல | மாவட்டம் | இடம் | திகதி | நேரம்(பழையது) |
|---|---|---|---|---|
| 01. | முல்லைத்தீவு மாவட்டம் | மாவட்டச்செயலகம். | 21.05.2005 | 10.00 |
| 02. | மன்னார் மாவட்டம் | வை,எம்,சி.ஏ.மண்டபம் | 25.05.2005 | 10.00 |
| 03. | யாழ்ப்பாண மாவட்டம் | யாழ்.பல நோ. கூட்டுறவு சங்கம் கேட்போர்கூடம் கே.கே. எஸ் வீதி. | 27.05.2005 | 10.00 |
| 04. | கிளிநொச்சி மாவட்டம். | மாவட்டச்செயலகம். | 28.05.2005 | 10.00 |
| 05. | வவுனியா மாவட்டம். | உள்ளுராட்சி,உ.ஆணையாளர் மண்டபகேட்போர் கூடம், பூங்கா வீதி,வவுனியா. | 29.05.2005 | 10.00 |

***மேற்படி திகதிகளில் குறிப்பிட்ட மாவட்டங்களில் நடைபெறும் பொதுக் கூட்டங் களில் சங்கத்தில் பதிவு செய்த சகல ஒப்பந்தக்காரர்களும் தவறாது கலந்து கொண்டு புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.***

***செயலாளர்.***


(சி.11951)


# ஏயர் பஸ் நிறுவனம் மீது மத்திய அமைச்சர் சாடல்

மும்பை ஏர்லைன்ஸை நடத்துவது பற்றி விமானத்தயாரிப்பு நிறுவனங் கள் அறிவுரை கூறத்தேவையில்லை. எப்படி செயற்படுத்துவது, என் னென்ன முடிவெடுப்பது என்பதில் எமது விமானப்போக்குவரத்து நிறு வனம் தெளிவாகவே உள்ளது என்று மத்திய விமானப்போக்கு வரத்துத் துறை அமைச்சர் பிரபுல் பட்டேல் தெரிவித்தார்.

யூபி நிறுவனத்தலைவர் விஜய் மல்லையாவின் கிங்பிஷர் ஏர் லைன்ஸ் சேவை மும்பையில் சனிக்கிழமை தொடங்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பட்டேல் மேற்கண்டவாறு பேசினார். 50 போயிங் விமானங்களை வாங்க ஏர்- இந்தியா முடிவு எடுத்துள்ளது. இது தொடர் பாக குறை கூறியிருந்த ஏர் பஸ் நிறுவனத்தின் துணைத்தலைவர் நைகேல் ஹவார்டு இந்தப் பேரம் தொடர்பாக லஞ்ச ஒழிப்பு ஆணையம் விசாரிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

# இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் தென்னாபிரிக்காவுக்கு 8 விக்கெட் வெற்றி






தென்னாபிரிக்க- மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் ஒரு நாள் போட்டியின் இரண்டாவது போட்டியிலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றுள்ளது. ஜமேக்காவில் நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா மேற்கிந்தியத்தீவை துடுப்பெடுத்தாடப் பணித்தது. இதன்படி தென்னாபிரிக்கப் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது திணறியதுடன் 40 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை இழந்தது. இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 153 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில களமிறங்கிய தென்னாபிரிக்கா, 33 ஓவர் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழையால் போட்டி பாதிக்கப்பட டக்வேத்லூயிஸ் விதியின்படி தென்னாபிரிக்கா எட்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. துடுப்பாட்டத்தில் டிப்பண்ணர் 60 ஓட்டங்களையும், கிப்ஸ் 44 ஓட்டங்களையும்ஆட்டமிழக்காது பெற்றனர். மூன்றாவது போட்டி நாளை பாபடோகில் நடைபெறவுள்ளது.

# அவுஸ். அணியின் தெரிவுக்குழுவில் சகலதுறை வீரர் டரன் லீமன்?



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சகல துறை வீரரான டரன்லீமன் அணியின் தெரிவுக்குழுவுக்கு வர விருப்பம் தெரிவித்துள்ளார்.

லீமன் இங்கிலாந்துடனான ஆஷஸ்தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து அவர் முன்னர் தெரிவுக்குழுவில் இடம்பெற்றிருந்து அண்மையில் ஓய்வில் சென்ற அலன் போடரின் இடத்துக்குவர விருப்பம் தெரிவித்துள்ளார்.

தற்போது தெற்கு அவுஸ்திரேலியாவில் கவுண்டி போட்டிகளில் விளையாடும் இவரை தேர்வாளர் சபைத்தலைவரான ட்ரவர் கோன்ஸ் வரவழைத்து இந்தப் பணியை ஏற்குமாறு அறிவித்துள்ளார்.

இந்தப் பணிக்கு லீமன் மிகவும் பொருத்தமானவர்என கோன்ஸ் தெரிவித்துள்ளார். லீமனை விட பிரைட்மார், ஷல்றோசன் ஆகியோரும் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

35 வயதான லீமனின் துடுப்பாட்ட சராசரி 45 ஆகும். எனினும் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டில் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து மதிக்கப்பட்ட இவர் அணித்தலைவராக வரும் வாய்ப்பும் இருந்தது. அலன் போடர் கடந்த மாதம் தெரிவுக்குழுப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதால் அந்த இடம் வெற்றிடமாகவுள்ளது.

# சாக்குப் போக்குச் சொல்ல விரும்பவில்லை இழந்த நிலையை மீண்டும் பெறுவேன்



பதான்

"பாகிஸ்தான் தொடரில் சோபிக்கத் தவறியதற்காக சாக்குப் போக்குச் சொல்ல விரும்பவில்லை உழைப்பை மட்டுமே நம்புகிறேன். கடும் பயிற்சி செய்து இழந்த நிலையை மீண்டும் பெறுவேன்"என்று சபதம் செய்கிறார் இர்பான் பதான்.

விக்கெட் வீழ்த்தியிருந்தால் எனது செயற்பாடு பற்றி யாரும் கேள்வி கேட்டிருக்க மாட்டார்கள். பாகிஸ்தான் தொடரில் அதிர்ஷ்டம் கைகொடுக்கவில்லை. மோசமான நிலை என்பது கிரிக்கெட்டில் சகஜம் இதை ஒரு காரணமாக சொல்லி தப்பிக்க விரும்பவில்லை. ஏமாற்றமும் அடையவில்லை. கடினமாகப் பயிற்சி செய்து முன்னேற்றம் காணும் முயற்சியில் இறங்கியுள்ளேன். இப்போது 130 முதல் 140 கி.மீ. வேகத்தில் பந்து வீசுகிறேன். மீண்டும் எனது பலமான 'ஸ்விங்' பந்துவீச்சில் சாதிப்பேன். ஒகஸ்டில் இலங்கையில் நடக்கவுள்ள முத்தரப்புத்தொடருக்கு முன்பாக இழந்த நிலையை மீட்டுவிடுவேன் இவ்வாறு பதான் நம்பிக்கையுடன் கூறினார்.

# ஆகஸ்டில் ஒருநாள் போட்டி

இலங்கை கிரிக்கெட் அணி கடந்த மாதம் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து ஐந்து ஒரு நாள் போட்டியில் விளையாடத் திட்டமிட்டிருந்த கடைசியில் இந்தப் பயணம் ரத்துச் செய்யப்பட்டது. இதற்கிடையே ஆகஸ்ட் கடைசி அல்லது செப்டெம்பரில் இலங்கை அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து ஐந்து போட்டியில் விளையாட முடிவு செய்துள்ளது. இதை இந்திய கிரிக்கெட் சபை ஏற்றுக்கொள்ளும் என்று இலங்கை நம்பிக்கை தெரிவித்துள்ளது.இந்திய அணி ஆகஸ்ட் முதல் வாரத்தில் இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து மூன்று நாடுகள் போட்டியில் விளையாடுகிறது. மூன்றாவது நாடாக மே.தீவு பங்கேற்கிறது.

# புதிய பயிற்சியாளரைத் தெரிவு செய்ய ஆறு பேர் கொண்ட குழு நியமனம்



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த ஜோன்ரைட் (நியூசிலாந்து) ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து புதிய பயிற்சியாளரைத் தேர்வுசெய்ய இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர்சிங் மகேந்திரா தலைமையில்ஆறுபேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்வுக்குழுவின் முதல் கூட்டம் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். சபையின் பரிசீலனையில் அவுஸ்திரேலிய முன்னாள் வீரர்கள் கிரேக் சேப்பல்,டாம் மோடி, இந்திய முன்னாள் வீரர்கள் மொகிந்தர் அமர்நாத், சந்தீப் பட்டேல் ஆகியோரின் பெயர் இடம்பெற்றுள்ளது. இவர்கள் நான்கு பேரிடமும் தேர்வுக் குழுவின் நேரில் கருத்து அறிந்து ஒருவரைத் தேர்வு செய்வார்கள்.புதியபயிற்சியாளர் யார்? என்பது ஜுன்15ஆம் திகதி முடிவாகும் என்று இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர்சிங் மகேந்திராகூறியுள்ளார்.



:.பெதார் வெயிட் உலக குத்துச்சண்டைப் போட்டி அமெரிக்காவில் லாஸ்வேகாஸில் சனிக்கிழமை நடைபெற்றது. இறுதி மோதலில், கொலம்பியா வீரர் விக்டர் போலோ முகத்தில் ஓங்கிக் குத்துகிறார். மெக்ஸிகோ வீரர் ஜீவான் மானுவல் மார்க்கல் 12 சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் ஏகமனதாக வெற்றி பெற்றார்.




# ஒப்பந்தம் முடிந்தவுடன் ஓய்வு பெறவுள்ளேன்—சிடென்

றியல் மாட்றிட் கால்பந்தாட்ட அணியின் நட்சத்திரவீரர் சினடின் சிடென் ஸ்பெய்ன் கழகத்துடனான ஒப்பந்தம் முடிந்தவுடன் தான் ஓய்வை அறிவிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். ஐ.ஏ.எப் செய்தி நிறுவனத்துக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியில் இரண்டு வருட ஒப்பந்த காலத்தில் கழகத்துக்கு தன்னால் இயன்றளவு ஆடி வெற்றி பெற்றுத் தருவதாகத் தெரிவித்துள்ளார்.31 வயதான இவர் கடந்த வருடமே ஓய்வில் செல்ல விருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

# இலங்கை கிரிக்கெட்டில் குழறுபடி பலவீனமடையும் நிலையில் கிரிக்கெட் அணி

—ரணதுங்க

கிரிக்கெட் சபையில் நிலவும் குழறுபடிகளால் அணியின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது என்கிறார் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க.

சமீபகாலமாக இலங்கை கிரிக்கெட் சபையில் பல்வேறு குழறுபடிகள் நடந்துள்ளன. நிதிமோசடி தொடர்பாக கிரிக்கெட் சபையை கலைத்த இலங்கை அரசு, இடைக்கால சபையை தற்போது நியமித்துள்ளது. இது குறித்து ரணதுங்க கூறியதாவது, கிரிக்கெட் சபை மூலம் நிறையப் பணம் கிடைப்பதால் சிலர் இதில் ஆர்வம் காட்டி வந்தனர். இவர்களால் அணி தற்போது அழிவை நோக்கிச் சென்று கொண்டுள்ள 1996 இல் உலகக் கோப்பை வென்ற பிறகு மூத்த வீரர்கள் சிலர் ஓய்வு [illegible]றனர். இவர்களுக்குப் பின் அத்தப்பத்து, ஜெயசூரியா,சமிந்தவாஸ், முரளிதரன் [illegible]பான்ற திறமையான வீரர்களால் அணி வலுவானதாக உள்ளது. இவர்க[illegible]துப் பின் அணியை வழிநடத்திச் செல்ல திறமை மிக்க இளம் வீரர்க[illegible] யாருமே இல்லை. சங்கக்கரா, ஜெயவர்த்தனா, சமரவீர ஆகியோர் நன்றாக ஆடுகின்றனர். ஆனால் ஒரு அணிக்கு மூன்று வீரர்கள் மட்டுமே போதுமா? இந்த மாதிரியான விடயங்களில் கவனம் செலுத்தாமல் பணத்திலே குறியாக இருந்தனர். முன்னாள் கிரிக்கெட் சபை உறுப்பினர்களால், எதிர்காலத்தில் உலகிலே பலவீனமான அணியாக இலங்கை மாறுவதற்கும் வாய்ப்புள்ளது. இவ் விடயத்தில் இடைக்கால சபை உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் ரணதுங்க கூறினார்.

# வவுனியா வடக்கு பிரதேச செயலக மெய்வல்லுநர் போட்டிகள்

வவுனியா வடக்கு பிரதேச செயலக விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நெடுங்கேணி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

வவுனியா வடக்குப் பிரதேச செயலர் .க.பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் அவர்களும், கௌரவ விருந்தினராக விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் ம.தமிழ்மாறன் அவர்களும் கலந்துகொண்டனர்.

இம்மெய்வல்லுநர் போட்டியில் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட 15 விளையாட்டுக்கழகங்களின் விளையாட்டு வீரர்கள் பங்குபற்றினர். (10)

# மாவீரர் மேஜர் மாறன் ஞாபகார்த்த மின்னொளியிலான கரப்பந்துப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட மேஜர் மாறன் நினைவான மின்னொளியிலான கரப்பந்து சுற்றுப்போட்டி நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் மாலை 7.00 மணிக்கு ஆரம்பமானது.

மேற்படி நிகழ்வில் மேஜர் மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு விளையாட்டுத்துறையின் முதன்மை ஆலோசகர் எதிர்வீரசிங்கம் ஈகச் சுடரினை ஏற்றிவைக்க மலர்மாலையினை கடற்புலிகளின் சமாசங்களின் பொறுப்பாளர் மோகன் அணி வித்து வைத்தார். தொடர்ந்து போட்டியை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சிறப்புரையுடன் ஆரம்பித்து வைத்தார். போட்டிகளை அமெரிக்காவில் இருந்து தாயகம் வருகை தந்த கெப் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். முதல் நாள் நடைபெற்ற நான்கு போட்டிகளில் இளந்தென்றல் வி.கழகம், நியூஸ்ரர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.

பாடசாலை அணிகளில் கனகபுரம் ம.வியும், தர்மபுரம் ம.வியும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.

தொடர்ந்து போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

# சுனாமி நலநிதி கால்பந்துப் போட்டி அரையிறுதிப் போட்டிகள் ஆரம்பம்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்டலீக் நடத்திய உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகவுள்ளன.


இன்று ஆர்ம்பமாகும் அரையிறுதி ஆட்டத்தில் இருந்து இறுதிப் போட்டி வரையான ஆட்டங்கள் யாவும் மின்னொளியில் இரவு 7.00மணி முதல் இடம்பெறவுள்ளன.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இன்றைய அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணியை எதிர்த்து வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. இன்று முதல் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான ஆட்டத்தில் யாழ். லீக்கை எதிர்த்து கிளிநொச்சி லீக் மோதவுள்ளது. (41)

# -ஒட்டுசுட்டான் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி- திருமுறிகண்டி இந்து வித்தியாலயம் துடுப்பாட்டம், கரப்பந்து போட்டியில் முதலிடம்

துணுக்காய் வலயத்தைச்சேர்ந்த ஒட்டுசுட்டான் கோட்ட மட்ட பெருவிளையாட்டுப்போட்டிகளில் மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலய மாணவர்கள் துடுப்பாட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் 17 வயதினருக்கான கரப்பந்தாட்டப் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். மேற்படி போட்டிகள் கடந்த நான்காம், ஐந்தாம் திகதிகளில் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

## சிந்தனைக்கு



போராட்ட வடிவங்கள் மாறலாம்; ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 10-05-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# ரணில் தனது பங்கிற்கு

பொதுக்கட்டமைப்புக் குறித்து ஆராய வருமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பை ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார். இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க நிராகரித்தது வருந்தத்தக்கதென சனாதிபதி சந்திரிகா ரணிலுக்கு மற்றொரு கடிதம் எழுத வேண்டிய அளவிற்கு சனாதிபதி சந்திரிகா ஏமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளார் எனக் கூறுதல் தவறில்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைப் பொதுக்கட்டமைப்பு என்பனவற்றிற்கு ஐ.தே. கட்சி தனது முழுமையான ஆதரவை வழங்கும் என ஐ.தே.க பிரமுகர்கள் கூறிவந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து இவ்வாறான நிராகரிப்பு வரும் என சனாதிபதி சந்திரிகா எதிர்பாராமல் இருந்திருக்கலாம். இதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் மென்போக்கும்,அண்மைக்காலத்தில் அவர் வெளிப்படுத்தி வந்த கருத்துக்களும் காரணமாக இருந்திருக் கலாம்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய முடிவு பற்றித் தமிழ்மக்கள் தரப்பில் ஆச்சரியமோ அன்றி அதிர்ச்சியோ அடைவதற்கு இதில் எதுவுமே இல்லை. ஏனெனில் வரலாற்று ரீதியாகச் சிங்கள அரசியல் கட்சிகள் இத்தகைய நிலைப்பாட்டையே எடுத்துள்ளனர். இதனையே ரணில் விக்கிரமசிங்கவும் தற்பொழுது மேற்கொண்டுள்ளார்.

அதாவது ஆளும் கட்சி விரும்பியோ, விரும்பாமலோ தமிழர் தரப்புடன் சில இணக்கப்பாட்டிற்குச் செல்லும் சூழ்நிலை ஏற்படும் போது எதிர்க்கட்சிகள் அதற்கு எதிராகச் செயற்படுவதும், அவற்றை குழப்பமுறச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்வதும் வழமையானதே. இதற்கு உதாரணங்கள் கூறிக்கொண்டிருப்பது திரும்பத் திரும்பக் கூறுதல் என்றதாகிவிடும்.

ஆகையினால், சிறிலங்கா எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஏதோ ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து ஆளும் கட்சியின் முயற்சிக்கு இடையூறு விளைவிப்பது எதிர்பார்க்கத்தக்கதே. இந்த வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க "பொதுக்கட்டமைப்பு நகல் வடிவத்தைப் பகிரங்கப்படுத்தினால் அதனை அமைப்பது பின்னர் தனது கட்சியின் நிலைப்பாட்டை தெரிவிப்பதாகக் கூறி" சனாதிபதியின் கோரிக்கையைத் தட்டிக்கழித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அழைப்பைத் தட்டிக் கழிப்பதற்குக் கூறியுள்ள காரணம் சரியோ, தவறோ எதுவாக இருப்பினும் சரி ரணில் விக்கிரமசிங்க நழுவிக்கொண்டுள்ளார். என்பதே உண்மையாகும். ஆனால், ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு மேற்கொண்ட நடவடிக்கை [illegible]றித்துக் குறைகூற முடியுமா? முடியாதா? என்பது முக்[illegible]மான தொன்றாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்நடவடிக்கையானது பொதுவில் தமிழ்மக்கள் மற்றும் சுனாமியினால் பாதிப்பிற்குள்ளான மக்கள் தரப்பிற்கு இழைக்கும் துரோகமாகவே கொள்ளத்தக்கதாக இருக்கும். ஏனெனில் மக்களுக்கான மீள் கட்டுமானப் பணிகள் மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் என்பனவற்றிற்கு ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய செயற்பாடுகள் முடிவு பாதகமானதே. அதாவது தமது அதிகார அபிலாசை, அரசியல் செயற்பாடுகளுக்காக மக்களின் நலனுக்கு விரோதச் செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டிருப்பதாகவே கொள்ள வேண்டிய தாக இருக்கும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ அன்றி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமோ ரணில் விக்கிரமசிங்க ஏமாற்றிவிட்டார் என்றோ, துரோகம் இழைத்து விட்டார்கள் என்றோ, அவரது நடவடிக்கை வருந்தத்தக்கது என்றோ, கூறுவது அர்த்தமற்றதொன்று. இத்தகைய குற்றச்சாட்டு எதையும் கூறுவதற்கு இவர்களுக்கு எந்தவித யோக்கியதையும் இல்லை.

ஏனெனில் சமதானத் தீர்வு, பேச்சுவார்த்தை என்பன குறித்து சனாதிபதி சந்திரிகாவும், அவரது அரசாங்கமும் கூறிக்கொண்டாலும் அவற்றிற்கு விசுவாசமாக அவை என்றுமே நடந்து கொண்டது கிடையாது. நெருக்கடிகள், நிர்ப்பந்தங்கள் காரணமாக இவர்கள் பேச்சுவார்த்தை, பொதுக்கட்டமைப்புக் குறித்து தமது அக்கறையை(?) வெளிக்காட்டி வருகின்றனரே ஒழிய அடிப்படையில் அவற்றிற்கு ஆதரவானவர்கள் இல்லை.

அடுத்ததாக ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட ரீதியிலும், ஐ.தே.க தலைவர் என்ற ரீதியிலும் சனாதிபதி சந்திரிகாவிற்கோ அன்றி அவரது அரசாங்கத்திற்கோ நம்பகத்தன்மையுடனும், விசுவாசத்துடனும் நடந்து கொள்ளவேண்டிய தேவையோ, கட்டாயமோ இல்லை. ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இவர்களால் போதியளவில் துரோகங்களும், துன்புறுத்தலும் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் நிராகரிப்பு ஆட்சியாளர்களுக்குத் துரோகம் எதையும் இழைக்காதுவிடினும் சிறிலங்கா அரசிடம் இருந்து சுனாமி அனர்த்த உதவிகளை எதிர்பார்த்திருக்கும் பாதிப்பிற்குள்ளாகியுள்ள குறிப்பாக தமிழ் மக்களுக்குப் பாதிப்பை விளைவிப்பதாக இருக்கும் எனக் கூறுவது மிகையாக மாட்டாது.

# த.பு.க. மட்டு. மாவட்டப்பணிப்பாளர் கைதுக்கு கிளி.மாவட்ட அ.சா.நி. கண்டனம்

தமிழர் புனர்வாழ்வுக் கழக மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டதுடன். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பெருந்தொகைப் பணம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வன்மையாகக் கண்டித்து சிறிலங்கா சனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அவ் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது; இம் மாதம் முதலாம் நாள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்றாம்கட்ட வேலைகளை தொடர்வதற்காக எமது இணையத்தில் அங்கத்தவராகவுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது பணிக்காக கொண்டு சென்ற பணத்தினை உயிலங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து சிறிலங்காப் படையினரால் சோதனை இட்டபோது பெருந்தொகைப் பணம் கொண்டு செல்ல முடியாது என்ற வகையிலும் உரியவர்கள் எவ்வளவோ விளங்கப்படுத்தியும் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் தன்னலமற்ற பணியில் பிழையான எண்ணத்தை தோற்றுவிக்கும் முகமாக தடைமுகாம் படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மட்டக்களப்புப் பணிப்பாளரைக் கைது செய்து பணத்தையும் தடுத்து வைத்து பலவாறான அடாவடித்தனங்களைப் புரிந்து அவமதிப்பையும் ஏற்படுத் தியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும்சேவை செய்துவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நாடுபூராவும் தனது புனர் நிர்மாண வேலைகளைச் செய்து வருவது யாவரும் அறிந்த இவ் விடயம் தங்கள் கீழ் பணியாற்றும் தடைமுகாம் படையினருக்கு தெரிந்தும் வேண்டுமென்றே செயற்பட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு ஒரு அவமதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்று செயற்பட்டதாகவே நாம் கருதுகின்றோம்.

இந்த நாட்டில் பலநூற்றுக் கணக்கான அரச சார்பற்ற நிறுவனங்கள் பணிபுரிகின்றன

இவைகளைப் போல உலகம் சார்ந்த நிதிவலுவைக் கொண்ட நிறுவனமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இலங்கையில் விளங்கும் ஓர் பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமாகும். இந் நிறுவனத்தின் அபிவிருத்திப் பணிக்கான இடைஞ்சல்கள் நீக்கப்படவேண்டும். நீங்களும், உங்கள் அதிகாரிகளும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை இழுத்தடிப்புக்கள் மேற்கொண்டு வருகிறீர்கள் ஆனால் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எங்கு அனர்த்தம் பாதிப்புக்கள் உள்ளதோ அங்கெல்லாம் ஓர் அரச சார்பற்ற நிறுவனமாகப் பணிசெய்து வருகின்றது.

தங்களால் அச்சிடப்பட்ட இலங்கையின் நாணயத்தாள்களை இலங்கைக்குள் கொண்டு செல்ல ஏன் தடை வேண்டும். இது எமக்கெல்லாம் மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்துகின்றது..ஆகவே அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு தங்கள் படையினராலும் இனவாதக் கருத்துக்களை ஏற்படுத்தி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முனைகின்ற போது அதற்கு எதிர்ப்பு ஊர்வலம் நடத்தும் இனவாதத்தினர் மத்தியில் ஒருவரையும் எதிர்பாராமல் பாதிக்கப்பட்டோருக்கான பணியினை பெரும் கஷ்டங்கள், சிரமங்கள் மத்தியில் தொடரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு பூரண ஒத்துழைப்பை தாங்கள் உடன் வழங்க ஒரு ஒழுங்கான நடவடிக்கையினை மேற்கொண்டு தடைகளை நீக்கி உத்தரவு இடவேண்டும் அத்தோடு கைது செய்துள்ளவர்களையும், பணத்தினையும் உடன் விடுவிக்க தாங்கள் விசேட நடவடிக்கை ஒன்றை தொடர வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் பணிதொடர தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தேவைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யுத்தநிறுத்த உடன்பாடு குறித்து சனாதிபதி இப்போது போற்றுவது வியப்பிற்குரியது

### ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

ஜக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் யுத்த நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக் கொள்ளாத சனாதிபதி தற்போது தனது ஆட்சியில அதனைப் போற்றுகிறார் என ஐக்கியதேசியக்கட்சி தெரிவித்துள்ளது. யுத்த நிறுத்த உடன்பாட்டை ஏற்படுத்தியதும், புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தையை நடத்தியதும் ஐக்கிய தேசியக்கட்சியே. இந்த நிலையில் விடுதலைப்புலிகளுடன் பேசச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பது இதுவே முதற்தடவை என சனாதிபதி தெரிவித்துள்ளமை முழுமையான பொய் என விசனம் தெரிவிக்கப்படுகிறது. (32)

### இந்திய உதவித்திட்டத்தின் கீழ்

# பெற்றோல், டீசலுக்குப் பதிலாக ஆமணக்கு விதைகளிலிருந்து எரிசக்தி

இந்திய உதவித்திட்டத்தின் கீழ் பெற்றோல், டீசல் அகியவற் றிற்குப் பதிலாக உள்ளூரில் கிடைக்கும் ஆமணக்கு விதைகளைப் பயன்படுத்தி எரிசக்தி உற்பத்தி செய்யும் திட்டம் வடமேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்த உள்ளதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நடவடிக்கைகளை வடமேல் மாகாண கைத்தொழில் அபிவிருத்திப் பணியகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆமணக்கு விதைகளின் மூலம் பெறப்படும் எண்ணெயின் ஊடாக வாகனங்கள் இயந்திரங்கள் என்பவற்றை இயக்க முடியுமென ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

# ஒரு பேருந்துக்கு 11 ஊழியர்கள் ஊதியம் வழங்க முடியாத நிலை

மத்திய போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கு மாத வேதனங்களை வழங்குவதில் பாரிய நிதிச்சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி குறிப்பிட்ட 11 போக்குவரத்துச்சாலைகளின் ஊழியர்களுக்கு இந்த மாதத்திற்கான வேதனங்களை வழங்கமுடியாதுள்ளதாக மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் நிஹால் பெரேரா தெரிவித்துள்ளார். மத்திய போக்குவரத்துச்சபையின் 11 சாலை களிலும் 41 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். மத்திய போக்குவரத்துச் சபையில் சுமார் 3700 பேருந்துகளே சேவையில் ஈடுபட்டுள்ளன. இதன் அடிப்படையில் சபையில் ஒரு பேருந்துக்கு 11 பேர் என்ற ஊழியர்கள் என்ற நிலை காணப்படுகிறது. தனியார் சிற்றூர்திகளைப் பொறுத்த வரையில் ஒரு தனியார் சிற்றூர்தியில் மூன்று ஊழியர்களே பணியாற்றுகின்றனர். எனவே மேலதிக ஊழியர் படைக்கு ஏற்ப வருமானம் இல்லாமையால் வேதனக் கொடுப்பனவில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இது இவ்வாறிருக்க போக்குவரத்து அமைச்சு இந்த நிலையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் நிதியுதவியைப் பெற்று சுயாதீன ஓய்வுத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள முயற்சித்து வருகிறது. (32)

# சுனாமியால் வீடுகளை இழந்தோருக்கு வங்கிகள் மூலம் நிதியுதவி

### நிதியமைச்சு அறிவிப்பு

ஆழிப்பேரலையினால் அழிவுற்ற வீடுகளை அமைக்கும் பணிகளுக்காக அரசாங்க வங்கிகள் சுமார் 450 மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளன.இதன்படி முழுமையாக வீடுகள் பாதிப்பற்றோருக்கு தலா இரண்டரை லட்சம் ரூபாவும், பாதி நிலையில் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.இதேவேளை ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்கள் தமது விண்ணப்பங்களை உரிய முறையில் நிரப்பி அரசாங்க வங்கிகளிடம் ஒப்படைப்பதன் மூலம் தமக்குரிய நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளலாமென நிதியமைச்சு அறிவித்துள்ளது. (32)

# மாமனிதர் சிவராமின் கொலையைக் கண்டித்து

# ரொரன்ரோவில் ஊடகவியலாளர் கூட்டம்

மாமனிதர் தர்மரத்தினம் சிவராம் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கனடா தமிழ் ஊடகவியலாளர் இணையமும், கனேடிய தமிழ் பேரவையும் இணைந்து நடத்திய கண்டனக் கூட்டம் நேற்று முன்தினம் கனடா ரொரன்ரோவில் நடைபெற்றது.

இக்கண்டனக் கூட்டத்தில், கனேடிய ஊடகங்களைச் சார்ந்த முக்கியஸ்தர் கள், கனேடிய அரசியல் பிரமுகர்கள், சர்வதேச ஊடகவியலாளர்கள், மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

உலகத் தமிழர் பத்திரிகையின் பொறுப்பாளர் கமல், கனேடிய தமிழர் பேரவையின் தொடர்பாளர் துளசி ஆகியோர் வரவேற்புரைகளை நிகழ்த்தினார்கள். பொதுச் சுடரினை, மாவீரரின் தாயாரும் எழுத்தாளருமான திருமதி வள்ளிநாயகி ராமலிங்கம் ஏற்றி வைத்தார்.

கன்சவேற்றிவ் கட்சி உறுப்பினரான ஜோன் மீற்றிஸ், லிபரல் கட்சிப்பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் குடிவரவு அமைச்சருமான ஜூடி ஸிக்றோ, ஒன்டாரியோ என்.டி.பி கட்சியைச் சேர்ந்த பீற்றர் கோமஸ், வீரகேசரி பிரதம ஆசிரியர் தேவராஜா, ஒலிபரப்பாளர் பி.விக்னேஸ்வரன், கனேடியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம், கனேடிய தமிழ் வானொலி அறிவிப்பாளர் ரவி, தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திருச்செல்வம், ஈழமுரசு செய்தியாளர் சற்குணம், முழக்கம் ஆசிரியர் அன்பரசி, மாமனிதர் சிவராமின் நெருங்கிய நண்பர் பாலசிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

கலாநிதி குலமோகன், பொன்னையா விவேகானந்தன்,சிவா சின்னத்தம்பி ஆகியோர் கவிதை படித்தனர்.

ஸ்காபரோ நகரில் அமைந்துள்ள புனித பீற்றர் அன்ட் போல் மண்டபத்தில், மாலை ஆறு மணிக்கு இடம் பெற்ற இந்தக் கண்டனக் கூட்டத்தில், ஏராளமான பொதுமக்களும், ஆர்வலர்களும், பல்வேறு தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளும், வர்த்தகர்களும் கலந்துகொண்டு தங்களது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.



# தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமன நேர்முகப் பரீட்சைகள் ரத்து

**- வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் உத்தரவு**

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சினால் கஷ்ர, அதிகஷ்ர பிரதேசப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு நடத்தப்பட்டுவந்த நேர்முகப் பரீட்சையை உடனடியாக ரத்துச் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.வடக்குக் கிழக்குமாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ மாகாணக்கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்திற்கு இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். நேர்முகப்பரீட்சை கடந்த இரண்டாம் திகதி முதல் வலயக்கல்வி அலுவலகங்கள் தோறும் நடத்தப்பட்டுவந்தது. இது தொடர்பாகப் பல்வேறு குறைபாடுகள் தொடக்கம் நியமனத்திற்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகள் பற்றி அமைச்சர்களாலும், பாராளுமன்ற உறுப்பினர்களாலும் சனாதிபதி மற்றும் ஆளுநர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கையை ஆளுநர் எடுத்துள்ளார். இதனையடுத்து கஷ்ரம், அதிகஷ்ரம் என்ற வேறுபாடின்றி மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் பகிரங்க விண்ணப்பம் கோரப்படுவதற்கும், ஆளுநரால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைசபை ஒன்றின் மூலம் முறையாக நேர்முகப்பரீட்சை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஆளுநர் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# இந்திய வெளியுறவு அமைச்சர் அடுத்தவாரம் இலங்கை வருகை

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வரவுள்ள இவர் அரசுத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. காங்கிரஸ் அரசு மத்தியில் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பின்னர் வெளிவகார அமைச்சர் நட்வர்சிங் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக முன்னர் அறிவித்திருந்போதும் அந்த விஜயம் பின்னர் காரணமின்றி பிற்போடப்பட்டது. தற்போது இலங்கை வரவுள்ள இந்திய அமைச்சர் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த இந்தியாவின் வெளிவிவகாரச் செயலர் கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் மே மூன்றாம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து முக்கிய பேச்சுக்களை நடத்திச் சென்றிருந்தமை தெரிந்ததே. (32)

## மக்கள் மீது...

பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சோதனைச்சாவடியின் இரு மருங்கிலும் வாசக அட்டைகளை ஏந்தியவாறு இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பி.அரியநேத்திரன், ரி.கனகசபை மற்றும் தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். ஆலய முன்றலிலிருந்து ஊர்வலமாக வந்த மக்கள் சோதனைச் சாவடி முன்பாக அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டபோது அந்த இடத்திற்கு வந்த இராணுவ அதிகாரிகள் இதுபற்றி மக்களுடன் பேசமுற்பட்டனர். மக்கள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டபோது மேலிடத்து உத்தரவின் பேரில் பாதுகாப்பின் நிமித்தம் இந்தப் புதிய வீதித்தடை ஏற்படுத்தப்பட்டதாக படைத்தரப்பிலிருந்து விளக்கமளிக்கப்பட்டது. இதனைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்தபோது படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் உங்களையும் சுட வேண்டுமென பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டபோது வாக்குவாதம் உச்சக் கட்டமடைந்தபோது பாராளுமன்ற உறுப்பினர் கனகசபை தனது சேட்டை திறந்து எங்கே சுடு பார்ப்போம் என்றார். இந்தச் சம்பவத்தின் போது படையினர் மிகவும் ஆத்திரமடைந்த நிலையில் அந்த இடத்தில் காணப்பட்டனர். கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்து வருகை தந்த அதிகாரியுடன்வந்த படையினர் வீதிமறியலில் ஈடுபட்ட மக்களை அகற்றுவதற்காக தடியடிப் பிரயோகம் செய்தனர். இந்த நிலையில் ஆத்திரமடைந்த மக்கள் கற்களை வீசினர். அந்த நேரத்தில் இராணுவத்தினர் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்து பொதுமக்களை தாக்கினர். இதனையடுத்து மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். அந்த இடம் சுமார் அரை மணி நேரம் இராணுவத்தினரின் இன வெறியாட்டத்தினால் அல்லோல கல்லோலப்பட்டது.

## ஜே.வி.பி...

தெரிவித்து வரும் ஊடகவியலாளர்களாவர். இதனாலேயே இவர்களிற்குப் புலிமுத்திரை குத்தப்பட்டு அவர்களிற்கு உயிராபத்தை ஏற்படுத்தும் வகையில் ஜே.வி.பி செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுவருகிறது. அண்மையில் மகரகமையில் நடைபெற்ற தேசப்பற்றுள்ள தேசிய அமைப்புக் கூட்டத்தில் அதன் இணைத தலைவரும் ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலருமான விமல் விரவன்ச இவர்கள் தொடர்பான கருத்துக்களை, விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

இதேவேளை லங்கா எனப்படும் ஜே.வி.பி யின் செய்தித்தாளில் ஜனநாத ரணதுங்க என்ற பெயரில் ஜே.வி.பி யின் பிரச்சாரச்செயலர் விமல் வீரவன்ச ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தலை விடுத்து வருகிறார்.

வன்சநாத என்ற பெயரில் விமல் வீரவன்சவே லங்கா செய்தி இதழில் அரசியல் கட்டுரைகளை எழுதி வருகிறார். இதனை அந்த ஏட்டின் செய்தி ஆசிரியரும் ஏற்றுக்கொன்டுள்ளார். (32)

## லெப்.கேணல்...

மருத்துவசேவையும்,குழந்தை நல மருத்துவன்சேவை, கண்மருத்துவ சேவை, மருந்தக சேவை போன்றன ஒழுங்கு படுத்தப்படுகின்றது. மேலும் இவ்லெப். கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையைத் தமிழீழத்தின் எல்லாப் பகுதிகளிலும் மாதா மாதம் ஒழங்கு செய்யவுள்ளனர். இவ் லெப். கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவசேவையின் ஊடாக நோயற்ற சமுதாயத்தை உருவாக்க வழிசமைப்பதுடன் நோய்வாய்ப்பட்ட மக்களுக்குஉரிய சிகிச்சையளித்து அவர்களும் நலிந்து போகாமல் காப்பாற்ற வழிசமைக்க முடியும். இம்மருத்துவ சேவை நடைபெறும் இடங் களில் அப்பிரதேச மக்கள் தங்கள் நோய்களுக்கான சிகிச்சைகளையும், அறிவுரைகளையும் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவு கேட்டுள்ளது.

## திருமலையில்...

இதேவேளை கட்டைப்பறிச்சான் ஊடாகக் கொண்டு செல்லப்படும் பொருட்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படுவது குறித்து படைத்தரப்பிடம் எழிலன் கேள்வி எழுப்பியபோது தலைமையகத்தின் கட்டளையின் படியே தாம் செயற்படுவதாக இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது.

## கிளிநொச்சி...

இதேவேளை இப்படுகொலையைக் கண்டித்து மாவட்டம் தழுவிய கண்டனப் பேரணிகளை புதன் காலை 9மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற இருக்கிறது. இதில் அனைத்துப் பொதுமக்களையும் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சிமாவட்ட வெகுசன ஒன்றியம் கேட்டுள்ளது. அத்தோடு இன்றும், நாளையும் அனைத்து இடங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்க நாளாகக் கடைப்பிடிக்குமாறும் கேட்டுள்ளனர்.

## வீரச்சாவு...

மட்டக்களப்பு) ஆகிய இரு போராளிகளுமே வீரச்சாவடைந்தவர்களாவர்.இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## தற்போதைய...

இராணுவத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட காவலரணை அகற்றக்கோரி நேற்றுக் காலை 8.30 மணியளவில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் அமைதிவழிஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பி.அரியநேத்திரன், ரி.கனகசபை மற்றும் தங்கேஸ்வரி ஆகியோரும் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இப்போராட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் காலை 9.30 மணியளவில் இராணுவத்தினரும், பொலிசாரும் இணைந்து அமைதி வழிப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததோடு தடியடிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர் இச்சம்பவத்தின்போது 65 வயதுடைய கந்தசாமி என்பவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட பத்திகையாளர் ஒருவர் பாடசாலை மாணவர்கள் மற்றும்பொதுமக்கள் உட்பட 16 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தின் இந்த வெறியாட்டத்தின்போது போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மக்களின்அமைதிவழிப்போராட்டத்தை ஆயுத வழிகொண்டு தடுப்பதானது போர் நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முற்றிலும் முரணானது என்பதுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஸ்திரத் தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும், தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கும், தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கும் அமைதி வழிப் போராட்டங்களை நடாத்தும் உரிமை மக்களுக்குண்டு.

மூன்றுவருட சமாதான முயற்சிகளுக்கூடாக தங்கள்மீது திணிக்கப்பட்ட தடைகள், நெருக்குவாரங்கள் நீக்கிசொந்த வாழ்விடங்களில் நிம்மதியாகச் சென்றுவாழலாம் என்று எதிர்பார்த்திருந்த மக்களிற்கு தமது எதிர்பார்ப்புகள் எதுவுமே நிறைவேறாதபோதும் இராணுவ அச்சுறுத்தல்களையும் ,நெருக்குவாரங்களையும் படைத்தரப்பு தீவிரப்படுத்தியிருப்பது. மக்கள் மத்தியில் பேரச்சத்தையும் கொந்தளிப்பையுமே ஏற்படுத்தியுள்ளது. இராணுவத்தினரின் புதிய கெடுபிடிகள்,இராணுவ முகாம்கள் மற்றும் காவலரண்களை மக்கள் வாழ்விடங்களில் அமைப்பதற்கு எதிராக மக்கள் அமைதிவழியில் தமது எதிர்ப்பைக் காட்ட முனைந்தபோது மனிதாபிமானமற்ற முறையிலும், கொடூரமான முறையிலும் அரச படைகள் மக்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

மக்களின்அமைதிவழிப் போராட்டத்தின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இதுபோன்ற சம்பவங்கள் மக்களிடையே போர் நிறுத்த சூழல் குறித்த நம்பிக்கையைத் தளர்த்தி உணர்வு ரீதியான கொந்தளிப்புக்கும் வழிவகுக்கும் என்பதோடு, நிலைமைகள் மேலும் நெருக்குதலுக்கு உள்ளாகலாம் எனவும் அஞ்சுகிறோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அம்பாறை மாவட்ட மாணவர் அமைப்பு விடுத்துள்ள கண்டன அறிக்கையில் சமாதான உடன்படிக்கைக்கு பின்பு சற்று நிம்மதியோடு தங்களது கல்வியை முன்னெடுத்துச்செல்கின்றவேளையிலேயே சிங்கள அரசின் திட்டமிட்ட கல்விச்சீர்திருத்தங்களினால் தமிழர்களது வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டு இப்படி தமிழ் மாணவ சமூகத்தையே பூண்டோடு நாசமாக்கும் வேலைத்திட்டங்களிலும் இறங்கியும், மறுபுறத்தே காஞ்சிரங்குடா படுகொலையிலும் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களது மாணவர் சமூகத்தினதும் இரத்தத்தை தனது கோரப்பற்களால் உறிஞ்சிக்குடிக்க மேற்கொள்ளும் சம்பவங்களை வண்மையாகக் கண்டிக்கிறோம்.

சந்திவெளிச் சம்பவத்திலே படுகொலை செய் யப்பட்ட கந்தசாமி (வயது-65) அவர்களது குடும் பத்திற்கும்,அங்கு படுகாயமடைந்த பொதுமக்கள், மாணவர்கள் உட்பட காயமடைந்த அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, சிங்கள வெறி பிடித்த இராணுவம் மீண்டும் யுத்தத்தில் இறங்கி யுத்தத்தை எம்மீது திணிக்க நினைத்தால் எமது மாணவ சமூகம் பின்நிற் கப்போவதில்லை அனைத்து மாணவர்களையும் ஒன்று திரட்டி எமது தேசியவிடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துச்செல்வோம். என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்சம்மேளனம் விடுத்துள்ள கண்டனஅறிக்கையில் பொதுமக்கள் உணர்வுகள் மதிக்கப்படவேண்டும் அவர்கள் உணர்வுகள் மதிக்கப்படாத வேளையில் பிரச்சினைகள் மேலோங்குவதைத்தவிர்க்க முடியாது. ஆகவே எவராய் இருப்பினும் பொதுமக்களது உரிமைகளையும் அவர்களது உணர்வுகளையும் தங்களது ஆயுத முனையால்அடக்கி ஒடுக்கநினைப்பது கண்டிக்கத்தக்கது. இம்மதிரியான சம்பவங்கள் மென்மேலும் இடம்பெறுமேயானால் இதுபாரிய ஒரு விளைவிற்கு வழிகோலும் என்பதனைத் தெரிவித்துக்கொள்வதோடு இம்மாதிரியான சம்பவங்கள் இனியும் நடை பெறாமல் இருக்க சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட தமிழர் மேம்பாட்டுப் பேரவை விடுத்துள்ள கண்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இப்படியான பாதகமான வேலைகளைத் தானா பௌத்தமதம் போதித்தது. காவி. அணிந்துகொண்டு காவாலித்தனம் செய்கின்ற காடையர்கள்கூட்டங்கள் எல்லாம் இன்று பாராளுமன்றம் சென்று போருக்குரிய முரசுகளைக்கொட்டுகின்றன. தமிழர்களது படைப் பலத்தின் வலிமைகளை மீண்டும் சீண்டிப்பார்க்க நினைக்கின்றார்கள் இம்மாதிரி யான சீண்டியெழுப்புக்களுக்கு சிறுத்தைக் கூட்டம் கிலிகொள்ளாது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம். நாங்களும் போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம் என்பதனை தெரிவித்துக்கொள்வதுடன், பொறுமைக்கும் எல்லை உண்டு. சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பர். அதுபோல் சமாதானத்தை அசட்டை பண்ணிப்போரியல் வழியில்தான் பங்கீடு என்றால் பாரதூரமான விளைவுகளை சிங்கள அரசாங்கம் சந்திக்கும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம். எனக்கூறப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது